தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 17.07.2013

### மரபணு மாற்றப்பட்ட பயிர் குறித்த அச்சத்தைப் போக்க வேண்டும்



c

மரபணு மாற்றப்பட்ட பயிர்களால் ஏற்படும் பாதுகாப்பு அச்சத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சிலுக்கு (ஐசிஏஆர்) குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சிலின் 85ஆவது ஆண்டு விழா தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரணாப் முகர்ஜி பேசியதாவது: வேளாண் துறையில் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தும். அதேநேரம், பொதுமக்கள் மத்தியில் இந்த பயிர்கள் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் என்ற அச்சம் நிலவுகிறது.

உணர்வுப்பூர்வமான இத்தகைய அச்சம் குறித்து தெளிவான விளக்கம் அளிக்க வேண்டியது அரசின் கடமை. இது தொடர்பாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு உள்பட்டு, பாதுகாப்பு அச்சத்தைப் போக்க ஐசிஏஆர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரணாப் தெரிவித்தார்.

மரபணு மாற்றப்பட்ட பி.டி. பருத்தியை வணிக ரீதியாக பயிரிட மத்திய அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கி உள்ளது. அதே நேரம், பொதுமக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக, மரபணு மாற்றப்பட்ட பி.டி. கத்தரிக்காயை வணிக ரீதியாக பயிரிட இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரணாப் மேலும் கூறியதாவது: ஒரு காலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறை நாடாக விளங்கிய இந்தியா, இப்போது உபரி நாடாகி உள்ளது. அதேநேரம், வேளாண் துறையின் வளர்ச்சிக்கு பருவநிலை மாற்றம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12ஆவது ஐந்தாண்டு திட்ட (2012-17) காலத்தில் 4 சதவீதம் என்ற வேளாண் துறை வளர்ச்சி இலக்கை எட்டுவதற்காக, அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய ரக விதைகளைப் பயன்படுத்துதல், நீர் மேலாண்மையை மேம்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**காவிரி: வானிலை மையத்தின் மழை அளவு அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும்**

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழை அளவு குறித்த விவரத்தை இந்திய வானிலை ஆய்வு மையத்திடம் பெற்று, அது தொடர்பான அறிக்கையை அடுத்த கூட்டத்துக்கு முன்பாக தமிழக அரசும், கர்நாடக அரசும் தாக்கல் செய்ய வேண்டும் என்று காவிரி மேற்பார்வைக் குழு தலைவர் அலோக் ராவத் உத்தரவிட்டார்.

காவிரி மேற்பார்வைக் குழுவின் மூன்றாவது கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை கூடியது. இதில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் தொடர்பாக குழுவின் தலைவரும், மத்திய நீர் வளத் துறைச் செயலருமான அலோக் ராவத் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய வானிலை ஆய்வு மையத் தகவலின்படி, இந்த ஆண்டு ஜூன் 1 முதல் ஜூலை 13-ஆம் தேதி வரை தெற்கு கர்நாடகப்

பகுதியில் 295.3 மி.மீ. மழை பெய்துள்ளது. இது வழக்கமான மழை அளவைவிட 25 சதவீதம் அதிகம். இதே காலகட்டத்தில் தமிழ்நாடு, புதுச்சேரியில் 86.8 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது வழக்கமான மழை அளவைவிட 21 சதவீதம் அதிகம்.

கர்நாடக அணைகளில் ஜூன் 1 முதல் ஜூலை 15-ஆம் தேதி வரை 115.95 டிஎம்சி நீர் வந்துள்ளது. இது வழக்கத்தைவிட 48.10 சதவீதம் அதிகம். இதே காலகட்டத்தில் பிலிகுண்டுலுவில் 34.51 டிஎம்சி நீர் வந்துள்ளது. இது வழக்கத்தைவிட 30.4 சதவீதம் அதிகம்.

கர்நாடகத்தின் நான்கு ஆணைகளில் ஜூலை 15-ஆம் தேதி வரை 72.33 டிஎம்சி நீர் இருந்தது. இது கடந்த ஆண்டு 23.51 டிஎம்சியாக இருந்தது. தமிழகத்தின் மேட்டூர் அணையில் ஜூலை 15-ஆம் தேதி 31.85 டிஎம்சி நீர் இருந்தது. இது கடந்த ஆண்டு 38.24 டிஎம்சியாக இருந்தது. இத்தகவல்களை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் இரண்டு மாநிலங்களிலும் பருவ மழை வழக்கத்துக்கு அதிகமாக பெய்துள்ளது தெரியவருகிறது.

அதிகாரம் கிடையாது: காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பின்படி, தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரின் அளவை 10 நாள்களுக்கு ஒருமுறை கணக்கிட்டு கர்நாடகம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று தமிழகம் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால், அவ்வாறு உத்தரவிடும் அதிகாரம் காவிரி மேலாண்மை வாரியத்துக்கு மட்டுமே உண்டு; தாற்காலிகமாக அமைக்கப்பட்ட காவிரி மேற்பார்வைக் குழுவுக்குக் கிடையாது.

கர்நடாகம், தமிழகத்தில் பெய்யும் மழையின் மொத்த அளவை அடிப்படையாக வைத்து நீர் பங்கீட்டை இறுதி செய்யக் கூடாது என இரண்டு மாநில அரசுகளும் கூட்டத்தில் வலியுறுத்தின.

ஆகையால், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை அளவு குறித்த விவரத்தை தமிழகமும், கர்நாடகமும் இந்திய வானிலை ஆய்வு மையத்திடமிருந்து பெற்று அடுத்த கூட்டத்துக்கு முன்பாக தாக்கல் செய்ய வேண்டும்.

பிலிகுண்டுலுவுக்கு ஜூன் 1 முதல் ஜூலை 15-ஆம் தேதி வரை 34.18 டிஎம்சி நீர் வந்துள்ளது. இது கர்நாடகம் வழங்க வேண்டிய 26.45 டிஎம்சி நீரைவிடக் கூடுதலாகும். ஆகவே, அடுத்த கூட்டத்தில் தண்ணீர் திறந்து விடுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று அலோக் ராவத் குறிப்பிட்டுள்ளார்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே புதன்கிழமை லேசான மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை வரையிலான 24 மணி நேரத்தில் காஞ்சிபுரத்தில் 50 மி.மீ. மழை பெய்துள்ளது. சென்னை, ஸ்ரீபெரும்புதூர், கேளம்பாக்கம், மதுராங்கம், வால்பாறை, பூண்டி, செங்குன்றம், தாமரைப்பாக்கம், சோழவரம், பெரியாறு ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழையும், செஞ்சி, கல்பாக்கம், மகாபலிபுரம், செங்கல்பட்டு, எண்ணூர், செம்பரம்பாக்கம் ஆகிய பகுதிகளில் 20 மி.மீ. மழையும் பெய்துள்ளது. தாம்பரம், உத்திரமேரூர், செய்யாறு, திருவள்ளூர், தேவலா, பேராவூரணி, மயிலம், திண்டிவனம், சின்னக்கல்லாறு, சோளிங்கர், காவேரிப்பாக்கம், திருமயம், ஆலங்குடி, வந்தவாசி, நெய்வேலி ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மேற்கு வங்கம் அருகில் காற்றழுத்த தாழ்வு மையம்: நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை பெய்து வரும் நிலையில், மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா

மாநிலங்களுக்கு இடையில் வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 70 அடியை எட்டியது**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதையடுத்து, செவ்வாய்க்கிழமை நீர்மட்டம் 70 அடியை எட்டியது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததையடுத்து, கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை முழுக் கொள்ளளவை எட்டியது. இதையடுத்து, அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்தது. மேட்டூர் அணைக்கு திங்கள்கிழமை நொடிக்கு 17,260 கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை நொடிக்கு 18,359 கன அடியாக அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் 70.54 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து இதே நிலையில் இருந்தால், இன்னும் பத்து நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 90 அடியை எட்டும் வாய்ப்புள்ளது.

**குன்னூரில் பலத்த மழை**

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பெய்த பலத்த மழையால், தேயிலை, மற்றும் காய்கறி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குன்னூரில் ஒருவார காலமாக லேசான மழை பெய்து வந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை திடீரென பலத்த மழை பெய்யத் துவங்கியது.

இரண்டு மணி நேரம் பெய்த இம்மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கூடலூர் ஒட்டான்குளத்துக்கு 3 ஆண்டுகளுக்குப் பிறகு நீர்வரத்து**

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, கூடலூரில் உள்ள ஒட்டான்குளத்துக்கு நீர்வரத்து துவங்கியுள்ளதால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்க பொதுப்பணித் துறையினரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டம், கூடலூர் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சுரங்கனார் நீர் வீழ்ச்சி உள்ளது. இந்த அருவித் தண்ணீர், ஒட்டான்குளம் என்று அழைக்கப்படும் மைதீன் மண்ணடியான் குளத்துக்கு வந்து சேரும். இதன்மூலம், ஒட்டான்குளம், ஈஸ்வரன் கோவில்புலம், பாரவந்தான், ஒழுகுவழிச் சாலைப் பகுதிகளில் உள்ள சுமார் 406 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்களில் இருபோகம் நெல் விவசாயம் நடைபெற்று வந்தது.

அதேபோன்று, முல்லைப் பெரியாற்றில் இருந்தும் வைரவன் வாய்க்கால் மூலம் கூட்டாறு வழியாக விநாடிக்கு 5 கனஅடி வீதம் 10 மாதங்களுக்கு திறந்து விடப்படும் தண்ணீரும் இந்த குளத்துக்கு வந்து சேரும்.

ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்தில், முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இதைப் பயன்படுத்தி, விவசாயிகள் முதல்போக பாசனத்துக்காக நெல் விதைக்கும் பணியில் ஈடுபடுவர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன், சுரங்கனார் அருவி அருகே திடீர் நிலச்சரிவு ஏற்பட்டதால், அருவி தண்ணீர் வழி மாறி, குளத்துக்கு தண்ணீர் வருவது தடைபட்டது. இதன் காரணமாக, இப்பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டு, ஏராளமான விளை நிலங்கள் தரிசாக மாறின. எனவே, ஒட்டான் குளத்துக்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதைத் தொடர்ந்து, ஆண்டிப்பட்டி சட்டப்பேரவை உறுப்பினர் தங்க. தமிழ்ச் செல்வனின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 18 லட்சம் செலவில் 18 ஆம் கால்வாய் அருகே தடுப்பு அணை கட்டப்பட்டு, முல்லைப் பெரியாற்றில் இருந்து ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்

பலனாக, 3 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வரத்து ஏற்பட்டு, குளம் நிரம்பி வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, உற்சாகத்துடன் விவசாயப் பணிகளை தொடங்கி உள்ளனர்.

உத்தமபாளையம், கம்பம், காமயகவுண்டன்பட்டி, சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் முதல் போகத்துக்கான நெல் நடவு பணிகள் துவங்கி விட்டதால், கூடலூர் ஒட்டான்குளம் விவசாயிகளும் நடவு பணியை துவங்குவதற்கு தயாராக உள்ளனர். தற்போது, விவசாயப் பணிகளை துவங்கினால் மட்டுமே 2 ஆவது போகம் விவசாயப் பணிகளை உரிய காலத்தில் துவங்க முடியும் என்பதால், ஒட்டான் குளத்திலிருந்து உடனடியாக தண்ணீர் திறக்க பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 21 இடங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்

தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், வரும் 18 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை, கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 21 இடங்களில் முகாம்கள் நடைபெற உள்ளன.

இது குறித்து, மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:

ஜூலை 18 ஆம் தேதி பூசனூத்து, 19 ஆம் தேதி தேவதானப்பட்டி அண்ணாநகர், 20 ஆம் தேதி ஸ்ரீரங்கபுரம், ஜெயமங்கலம் சங்கரமூர்த்திபட்டி, 22 இல் கூடலூர் பளியங்குடி, வயல்பட்டி, 23 இல் சோலைத்தேவன்பட்டி, 24 இல் டி.அழகாபுரி, 25 இல் கதிர்நரசிங்காபுரம், 26 இல் சருத்துப்பட்டி, சின்னமனூர் மலையாண்டிபுரம், திம்மிநாயக்கன்பட்டி புதுக்கோட்டை, 27 இல் ஆண்டிபட்டி ரெங்கநாதபுரம், கம்பம் உத்தமபுரம், பூமலைக்குண்டு, 29 இல் டி.மேட்டுப்பட்டி, எம். சுப்புலாபுரம் முத்துரெங்காபுரம், 30 இல் கைலாசபட்டி, ராசிங்காபுரம் மணியம்பட்டி, உ.அம்மாபட்டி கருவேலம்பட்டி, 31 இல் கண்டமனூர் கணேசபுரம் ஆகிய இடங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெற உள்ளது.

இந்த முகாமில், கால்நடைகளுக்கு பொதுச் சிகிச்சை, குடற்புழு நீக்கம், மலடு நீக்க சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல், சினைப் பரிசோதனை, சுண்டுவாத அறுவைச் சிகிச்சை ஆகியன மேற்கொள்ளப்படும். மேலும், கோழிக் கழிசல் தடுப்பூசியும் போடப்படும்.

சிறந்த கால்நடை வளர்ப்பு மற்றும் சிறந்த கன்று வளர்ப்புக்கு பரிசு, தாதுக் கலவை வழங்கப்படும். தீவனப்புல் வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இந்த முகாமுக்கு, விவசாயிகள் கால்நடைகளை அழைத்து வந்து பயனடையலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மறியல்**

கோரிக்கைகளை வலியுறுத்தி சிவகங்கை, மானாமதுரை, காரைக்குடியில் மறியல் போராட்டம் நடத்திய தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிவகங்கை அரண்மனை வாசல் அருகே தமிழ்நாடு விவசாயத் தொழிற்சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை மறியல் போராட்டம் நடத்தினர். இச்சங்கத்தின் சிவகங்கை மாவட்டத் தலைவர் விசுவநாதன் தலைமை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலர் சந்திரன், நகரச் செயலர் கங்கை சேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கலந்து கொண்ட 90 பேர் கைது செய்யப்பட்டனர்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி ஓய்வூதியச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்,  55 வயதான விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.3,000 மாத ஓய்வூதியம் வழங்க வேண்டும், வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை பெறும் உரிமை நாள்களை 200 ஆக உயர்த்தி, தின ஊதியத்தை ரூ.300 ஆக வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் போராட்டம் நடைபெற்றது.

மானாமதுரை: இதே கோரிக்கைகளை வலியுறுத்தி மானாமதுரையில் தலைமை தபால் அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்புடைய தமிழ்நாடு விவசாயத் தொழிற்சங்கத்தினர் மறியல் போராட்டம் நடத்தினர்.

இதற்கு தமிழ்நாடு விவசாயத் தொழிற்சங்க மாநிலத் தலைவர் கே. தங்கமணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலர் எஸ். முத்தையா ஆகியோர் தலைமை வகித்தனர்.

மறியலில் விவசாயிகள் சங்க ஒன்றியத் தலைவர் அம்மாவாசை, விவசாயத் தொழிற்சங்க மாவட்ட துணைச் செயலர் கருப்புச்சாமி, ஒன்றியச் செயலர் அடியாக்கி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர்ச் செயலர் பாலபாரதி, ஒன்றிய துணைச் செயலர் ஆறுமுகம் உள்பட மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயத்  தொழிலாளர்கள் 75 பேர் கலந்து கொண்டனர். மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

இதில் கலந்து கொண்ட சங்கத்தின் மாநிலத் தலைவர் கே. தங்கமணி உள்பட 75 பேரைப் போலீஸார் கைது செய்தனர்.

காரைக்குடி: காரைக்குடி பழைய பஸ் நிலையத்தில் இருந்து தமிழ்நாடு விவசாயத் தொழிற்சங்கத்தின் மாவட்டச் செயலர் நா. சாத்தையா தலைமையில் இரண்டாவது போலீஸ் பீட் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர் பிஎல். ராமச்சந்திரன், விவசாயத் தொழிற்சங்க நிர்வாகிகள் கார்வண்ணன், எம். சிதம்பரம், ஏஆர். சீனிவாசன், எஸ். பாண்டித்துரை, பி. பாண்டிமீனாள், கே. மஞ்சுளா உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

இதில் கலந்து கொண்ட 180 பெண்கள், 80 ஆண்கள் உள்பட 260 பேரை காரைக்குடி டி.எஸ்.பி. மங்களேஸ்வரன் தலைமையிலான போலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

**கோழிப்பண்ணையில் பல லட்சம் ரூபாய் முதலீடு செய்து தத்தளிக்கும் விவசாயிகள்**

சிங்கம்புணரியை சுற்றி சுமார் 300 விவசாயிகள் கோழிப்பண்ணையில் பல லட்சங்கள் முதலீடு செய்து தத்தளிக்கும் நிலையில் தற்போது வங்கியின் ஜப்தி நடவடிக்கையால் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சிங்கம்புணரி மற்றும் எஸ். புதூர் வட்டாரப் பகுதி விவசாயிகள் தங்களது விவசாய நிலங்களை வங்கிகளில் அடமானம் வைத்தும், பல லட்சம் ரூபாய் முதலீடு செய்தும் கோழிப்பண்ணை நடத்தி வருகின்றனர்.

இதில் கோழிக்குஞ்சுகளைப் பண்ணையில் பராமரித்து அவற்றை வளர்த்து பின்னர் கம்பெனிகளுக்கு திருப்பித்தர வேண்டும். இவ்வாறு வளர்க்கப்படும் கோழிகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 பராமரிப்புக் கூலியாக வழங்கப்பட்டு வருகிறது.

ஆயிரக்கணக்கான குஞ்சுகளை வளர்த்தால் 40 நாளில் பெரும் லாபம் சம்பாதிக்கலாம் என விவசாயிகளுக்கு ஆசை வார்த்தை காட்டிய பிராய்லர் கம்பெனிகளால் பலர் தங்களது சொத்துக்களை வங்கிகளில் அடமானம் வைத்தும், கடன் வாங்கியும் பண்ணை அமைத்தனர். இவ்வாறு பண்ணை நடத்திய அனைத்து விவசாயிகளின் நிலையும் தற்போது கேள்விக்குறியாக உள்ளது.

ஏனென்றால் விவசாயிகளுக்கு கம்பெனிகளில் இருந்து முறையாக கோழிக்குஞ்சு விநியோகிக்காததால் தொழில் செய்ய முடியாதநிலை உள்ளது. மேலும் தற்போது வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் உள்ளதால்

விவசாயிகளின் நிலங்களை ஏலத்திற்கு கொண்டு செல்ல வங்கிகள் நோட்டீஸ் அனுப்பியுள்ளன. இதனால் இப்பகுதியில் கோழிப்பண்ணை நடத்தி வரும் விவசாயிகள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இது குறித்து தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்போர் சங்க மாவட்டத் தலைவர் தனபால் கூறியதாவது:

பிராய்லர் கம்பெனியின் பிரதிநிதிகள் விவசாயிகளை சந்தித்து, நாங்கள் தரும் குஞ்சுகளை வளர்த்தால் அதிக லாபம் சம்பாதிக்கலாம் என ஆசை வார்த்தை கூறி எங்களை கோழிப்பண்ணை நடத்தக் கூறினர். 5 ஆண்டுகளுக்கு முன்பு நல்ல முறையில் நடைபெற்ற தொழில், தற்போது தரம் இல்லாத குஞ்சுகளை பிராய்லர் கம்பெனிகள் அனுப்பி வைப்பதால் நஷ்டத்துக்குள்ளாகின்றனர். நாம் கேட்கும் நேரத்திற்கு குஞ்சுகளை தருவதும் கிடையாது.  கோழிகள் 2 கிலோ வளர்ந்த பிறகும் சரியான நேரத்திற்கு வாங்க கம்பெனிகள் மறுத்து விடுகின்றன. இதனால் எங்கள் நிலை மிக மோசமாகி விட்டது.

இந் நிலையில், வங்கிகள் ஜப்தி நடவடிக்கைக்காக நோட்டீஸ் அனுப்பியுள்ளதால் கோழிப்பண்ணை அமைத்த விவசாயிகள் அனைவரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.  முன்பு கோழிப்பண்ணை நிறுவனத்தினர் எங்களுக்காக வங்கிகளில் ஜாமீன் கொடுத்துவிட்டு தற்போது அது இல்லை என மறுக்கின்றனர். எனவே, இப்பிரச்னையில் அரசு தலையிட்டு கோழிப்பண்ணை அமைத்துள்ள நூற்றுக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கையை வளமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகும் என்றார்.

**விவசாயிகள் சங்க மாநாடு:பிரசார கலைக் குழு பயணத்துக்கு வரவேற்பு**

தமிழ்நாடு விவசாயிகள் சங்க அகில இந்திய மாநாடு பிரசார கலைக் குழு பயணத்துக்கு மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்புடைய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாடு ஜூலையில் கடலூரில் நடைபெறுகிறது. மாநாட்டின் நோக்கம் குறித்து சங்கத்தின் சார்பில் மாநிலம் முழுவதும் கலைக் குழு மூலம் பிரசாரம் செய்து வருகிறது.

இப் பயணக் குழுவினருக்கு திருப்புவனத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜெயராமன், ஈஸ்வரன் ஆகியோர் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தனர். அதன்பின் இக் குழுவினர் பூவந்தி, லாடனேந்தல் ஆகிய இடங்களில் பிரசாரம் செய்தனர்.

அதைத் தொடர்ந்து மானாமதுரையில் இக் குழுவினருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பேரூராட்சி அலுவலகப் பகுதி, பழைய பஸ் நிலையம் ஆகிய இடங்களில் விவசாயிகள் சங்க அகில இந்திய மாநாட்டை விளக்கி கலைக் குழுவினர் பிரசாரம் செய்தனர்.

இதில் விவசாயிகள் சங்க மானாமதுரை ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

தேவகோட்டையில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி திங்கள்கிழமை நடைபெற்றது.

நகராட்சி அலுவலகம் அருகே பேரணியை நகர்மன்றத் தலைவர் சுமித்ரா தொடக்கி வைத்தார். இதில் மேலாளர் பிச்சை மைதீன், மகளிர் மன்றத்தினர், பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

பேரணி தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் நிறைவடைந்தது. இதில் கலந்து கொண்டவர்கள் மழை நீர் சேகரிப்பதன் அவசியம் குறித்த பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

பேரணி நிறைவில் மழை நீர் சேகரிப்பின் நோக்கம் குறித்து நகர்மன்றத் தலைவர் உரையாற்றினார்.

**வைரஸ் நோய்களை எதிர்த்து வளரும் பயறு ரகங்களைக் கண்டறிய வேண்டும்'**

வைரஸ் நோய்களை எதிர்த்து வளரும் திறன் கொண்ட பயறு ரகங்களைக் கண்டறிய வேண்டும் என்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகப் பதிவாளர் ஆர்.ரபீந்திரன் பேசினார்.

மூலக்கூறுகளின் தாவர வைரஸ் நோய்களைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பப் பணிமனை மற்றும் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

பல்கலைக்கழக தாவர மூலக்கூறுவியல் மற்றும் உயிரி தகவலியல் துறை மற்றும் தாவர வைரஸ் துறை, ஜெர்மனியின் தி லீப்னிஸ் நிறுவனத்துடன் இணைந்து இப் பயிற்சியை நடத்துகிறது.

இதில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகப் பதிவாளர் ஆர்.ரபீந்திரன் பேசியது:

1962-63இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் வைரஸ் நோய்கள் இந்தியாவில் உருவானது. பூச்சிகள் மூலமாகப் பரவும் வைரஸ் நோய்களால் இந்தியாவில் பயிரிடப்படும் உணவு தானியங்கள், காய்கறிகள் மற்றும் கனிகள் பெருமளவு பாதிக்கப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் பயறு வகைகளை அதிகமாகப் பயிரிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால் இப் பயிர்களைத் தாக்கும் வைரஸ் நோய்களை எதிர்த்து வளரும் திறன் கொண்ட பயறு ரகங்களைக் கண்டறிய வேண்டும். இதற்குத் தகுந்த கட்டுப்பாட்டு முறைகளைக் கண்டறிய வைரஸ் நோய்களின் தொற்று வாயை அறிய வேண்டும்.

பைட்டோபிளாஸ்மா போன்ற மேலும் சில நோய் தாக்கக்கூடிய நுண்கிருமிகள் நமது நாட்டில் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் கண்காணிப்பை மத்திய அரசு பலப்படுத்த வேண்டும் என்றார்.

வன மரபியல் மற்றும் மரப் பெருக்க நிறுவன இயக்குநர் என்.கிருஷ்ணகுமார் பேசியது:

மரங்களில் காணப்படும் வைரஸ் நோய்களைக் கண்டறிய உதவும் மையங்களை அமைக்க வேண்டும். உணவுப் பாதுகாப்பு கொள்கைகளுக்கு ஏற்ப வைரஸ் நோய்களால் உருவாகும் பயிர் இழப்பைத் தடுக்கும் வகையில் புதிய யுக்திகளையும், முறைகளையும் உருவாக்க வேண்டும் என்றார்.

ஜெர்மனியின் தி லீப்னிஸ் நிறுவனத்தின் தலைவர் ஸ்டீபன் வின்ட்டர் பேசுகையில், எதிர்காலத்தில் ஏற்படும் இழப்புகளைக் கட்டுப்படுத்த புதிய தலைமுறை ஆராய்ச்சியாளர்களுக்கு இன்றைய நவீனக் கருவிகள், முறைகளைக் கொண்டு வைரஸ் நோய்களைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றார்.

**லோயர் நீராறில் 34 மி.மீ. மழை**

லோயர் நீராறு அணைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 34 மி.மீ. மழை பெய்துள்ளது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சோலையாறு 12, பரம்பிக்குளம் 13, அப்பர் நீராறு 12, வால்பாறை 10, மணக்கடவு 4.3, தூணக்கடவு 15, பெருவாரிப்பள்ளம் 12.

**பவானிசாகர் அணைநீர்மட்டம் 64.11 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 64.11 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி.

அணைக்கு விநாடிக்கு 731 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 8.66 டி.எம்.சி.

**கொப்பரை ஏலம்**

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.3 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் போனது.

மொடக்குறிச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 5,301 கிலோ கொப்பரையும், 23,298 தேங்காய்களையும் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். முதல் தர கொப்பரை அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.44.95-க்கும், குறைந்தபட்சமாக ரூ.39.45-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சமாக ரூ.40.35-க்கும், குறைந்தபட்சமாக ரூ.30.85 என ரூ.2 லட்சத்து 22 ஆயிரத்துக்கு விற்பனையானது. தேங்காய் அதிகபட்சமாக ஒரு டன் ரூ.12,880, குறைந்தபட்சமாக ரூ.9,150 என ரூ.93,000-க்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தைவிட தேங்காய், கொப்பரையின் விலை சற்று குறைந்துள்ளது.

**குன்னூரில் பலத்த மழை**

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பெய்த பலத்த மழையால், தேயிலை, மற்றும் காய்கறி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குன்னூரில் ஒருவார காலமாக லேசான மழை பெய்து வந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை திடீரென பலத்த மழை பெய்யத் துவங்கியது.

இரண்டு மணி நேரம் பெய்த இம்மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**ஜூலை 19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜூலை 19-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூலை 19-ம் தேதி நடைபெறும் கூட்டத்தில் நீர்ப்பாசனம், கடன் உதவிகள், இடுபொருள்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவித்து பயன் பெறலாம் என்றார் அவர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

அன்னவாசல் பேரூராட்சியில் மழைநீர் சேகரிப்பைப் பற்றிய விழிப்புணர்வுப் பேரணி பேரூராட்சித் தலைவர் உஷாராணி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சி துணைத் தலைவர் பழனிச்சாமி, செயல் அலுவலர் தேவதாஸ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

நகரின் முக்கிய பகுதியின் வழியாகச் சென்ற பேரணி கடைவீதியில் முடிந்தது. பேரணியில் பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பேரூராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணியின்போது மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை அளித்து, விழிப்புணர்வு பதாகைகளையும் ஏந்தி கோஷமிட்டுச் சென்றனர்.

**கொப்பரை கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ. 52.50 நிர்ணயம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் தேங்காய் கொப்பரை விலை கிலோவுக்கு ரூ. 52.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

மாவட்டத்தில் ஆலங்குடி, அறந்தாங்கி கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் நிகழ் ஆண்டுக்கான கொள்முதல் தொடங்கப்படவுள்ளது. இதில் ஒரு கிலோ கொப்பரைக்கு  ரூ. 52.50 எனக் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே கடந்தாண்டு அல்லது கடந்தாண்டு வரை கொப்பரை விற்பனை செய்ய அடையாள அட்டை பெற்ற தென்னைச் சாகுபடி விவசாயிகள், தற்போது அடையாள அட்டையில் அந்தந்த விஏஓக்களிடம் சான்று பெற்று, தொடர்புடைய கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் பதிவு செய்து புதுப்பித்து, தேங்காய் கொப்பரைகளை விற்பனை செய்யலாம்.

இதில் ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால் அந்தந்த வேளாண் உதவி இயக்குநர் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை அணுகலாம்

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 71.00 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 71.00 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 18,509 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மரபணு மாற்றப்பட்ட பயிர் குறித்த அச்சத்தைப் போக்க வேண்டும்**

மரபணு மாற்றப்பட்ட பயிர்களால் ஏற்படும் பாதுகாப்பு அச்சத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சிலுக்கு (ஐசிஏஆர்) குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சிலின் 85ஆவது ஆண்டு விழா தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரணாப் முகர்ஜி பேசியதாவது: வேளாண் துறையில் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தும். அதேநேரம், பொதுமக்கள் மத்தியில் இந்த பயிர்கள் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் என்ற அச்சம் நிலவுகிறது.

உணர்வுப்பூர்வமான இத்தகைய அச்சம் குறித்து தெளிவான விளக்கம் அளிக்க வேண்டியது அரசின் கடமை. இது தொடர்பாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு உள்பட்டு, பாதுகாப்பு அச்சத்தைப் போக்க ஐசிஏஆர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரணாப் தெரிவித்தார்.

மரபணு மாற்றப்பட்ட பி.டி. பருத்தியை வணிக ரீதியாக பயிரிட மத்திய அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கி உள்ளது. அதே நேரம், பொதுமக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக, மரபணு மாற்றப்பட்ட பி.டி. கத்தரிக்காயை வணிக ரீதியாக பயிரிட இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரணாப் மேலும் கூறியதாவது: ஒரு காலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறை நாடாக விளங்கிய இந்தியா, இப்போது உபரி நாடாகி உள்ளது. அதேநேரம், வேளாண் துறையின் வளர்ச்சிக்கு பருவநிலை மாற்றம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12ஆவது ஐந்தாண்டு திட்ட (2012-17) காலத்தில் 4 சதவீதம் என்ற வேளாண் துறை வளர்ச்சி இலக்கை எட்டுவதற்காக, அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய ரக

விதைகளைப் பயன்படுத்துதல், நீர் மேலாண்மையை மேம்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**பால் தொழில்நுட்பம், தானியம் பதப்படுத்துதல்:இக்னோவில் புதிய படிப்பு**

பால் தொழில் நுட்பம் குறித்த ஓராண்டு தொலைதூரக் கல்வியைத் தில்லியில் உள்ள இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் இம் மாதம் தொடங்க உள்ளது.

மேலும், "தானியங்கள் பதப்படுத்துதல்' குறித்த ஓராண்டு காலப் பட்டயப் படிப்பும் இந்த ஆண்டு தொடங்கப்பட உள்ளது.

இது குறித்து, பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

12-ஆம் வகுப்பு முடித்தவர்களும், இந்திராகாந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் "பேச்சலர் ஆஃப் பிரிப்பரட்டரி புரோகிராம்' (ஆடட) முடித்தவர்களும் இப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

பயிற்று மொழி ஆங்கிலம் மற்றும் இந்தி. கல்விக் கட்டணம் ரூ. 12,000. வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கு கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை அளிக்கப்படும். ஓராண்டு படிப்பு என்றாலும் 4 ஆண்டு வரை படிப்புக்கான காலம் தளர்வு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்வி மையங்களில் ரூ. 200 செலுத்தி இதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தூய்மையான பால் தயாரிப்பு முறை, சோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு உள்ளிட்டவை குறித்து இப்படிப்பில் அடங்கும்.

மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறையின் ஆதரவுடன் இப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

"தானியங்கள், பருப்புகள், எண்ணெய்வித்துகளில் இருந்து மதிப்புகூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பில் டிப்ளமா' என்ற ஓராண்டுப் படிப்பில் சேர 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

படிப்புக்கான கல்விக் கட்டணம் ரூ. 11,000. பாடத் திட்டங்கள் ஆங்கில வழியில் இருக்கும்.

இப்படிப்பு மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்கள் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

தானியங்கள், பருப்புகள், எண்ணெய்வித்துகள் ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் தொழிலில் மனித வள போட்டியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இப்படிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.07.2013**

**விவசாய மலர்**

**வெண்டை சாகுபடி**

வெண்டை சாகுபடியில் சாதாரண ரகங்கள் அதாவது அர்க்க அனாமிகா மற்றும் அர்க்கா அபை உள்ளன. ஆனால் இவைகள் ஒட்டு வீரிய ரகங்கள் அல்ல. இருந்தாலும் விவசாயிகள் இவைகளை சாகுபடி செய்கிறார்கள். அடுத்து ஒட்டு வீரிய ரகங்களும் உள்ளன. குறிப்பாக மைக்கோ ரகங்கள் (நம்பர் 10, 11, 12) இவைகளையும் சாகுபடி செய்யலாம். இதில் ஒரு அனுகூலம் உள்ளது. விதை வாங்கும் இடத்தில் விதையை "கௌச்' என்னும் மருந்துடன் கலந்து தருகிறார்கள். இது வியாதிவராமல் தடுக்கின்றது.

வெண்டை சாகுபடி செய்பவர்கள் முதலில் வெண்டையைத் தாக்கும் மஞ்சள் நரம்பு நோய் பற்றி தெரிந்துகொள்வது நல்லது. வெண்டையை இளம் வயதில் மஞ்சள் நரம்பு நோய் தாக்கும். நரம்புகள் தடித்து முதலில் இலை மஞ்சள் நிறமாக மாறிவிடும். இதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்தை அடைவார்கள். ஆதலின் விவசாயிகள் நோய்கள் தாக்காத ரகங்களை ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளன. கௌச் மருந்து மஞ்சள் நரம்பு நோயினை தாக்காமல் கவனித்துக் கொள்கிறது.

**சாகுபடி விபரம்:** சாகுபடிக்கு தேர்ந்தெடுத்த நிலத்தினை நன்கு உழுது ஏக்கருக்கு நன்கு மக்கிய தொழு உரம் 10 டன் இட்டு மீண்டும் இயற்கை உரம் மண்ணோடு நன்றாக கலக்கும்படி உழவேண்டும். பிறகு நிலத்தில் 60 செ.மீ. இடைவெளி கொடுத்து பார்சால் அமைக்க வேண்டும். விவசாயிகள் தாங்கள் தேர்ந்தெடுத்த ரகங்களின் விதையை பாரில் விதைக்கு விதை 20 செ.மீ. இடைவெளியில் குழிக்கு ஒன்று அல்லது இரண்டு விதைகள் விதைக்க வேண்டும். விதைத்த பின் எம்.என்.

மிக்சர் 5 கிலோவை மணலுடன் கலந்து ஒரே சீராக இடவேண்டும். உடனே பாசனம் செய்ய வேண்டும். செடி முளைத்து மூன்று இலை பருவத்தை அடைந்தவுடன் ஒரு லிட்டர் நீருக்கு 10 கிராம் அன்னபேதி உப்பு மற்றும் 20 கிராம் யூரியா இவைகளை கலந்து செடிகள் மீது தெளிக்க வேண்டும். வளர்ச்சி காலத்தில் மூன்று களையெடுக்க வேண்டும். இரண்டாவது களையெடுக்கும் சமயம் ஏக்கருக்கு ஒரு மூடை டி.ஏ.பி.,ஒரு மூடை பொட்டாஷ் இட்டு செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும். செடி முளைத்து வரும்போது அதாவது செடியின் வயது 25 நாட்கள் இருக்கும்போது கான்பிடார் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் தெளித்துவிட வேண்டும்.

இந்த மருந்தின் காரம் நீண்டநாள் இருக்குமாதலால் விதை விதைத்து சுமார் 70 நாட்கள் மஞ்சள் நோய் வராமல் தடுக்கும். கான்பிடார் மருந்தினை ஒருமுறை பயன்படுத்தினால் போதும். நிலத்தில் 35வது நாளிலிருந்து காய்கள் காய்க்கத் துவங்கும். செடியின் வயது 25 நாட்களாக இருந்தபோதும் கான்பிடார் காரம் விஷம் இருக்காது. சாம்பல் நோய் லேசாக தலைகாட்டும். உடனே ஒரு லிட்டர் நீருக்கு இரண்டு கிராம் நனையும் கந்தகம் கலந்து செடிகள் மேல் தெளிக்க வேண்டும்.

வெண்டை செடிகள் அதிக அளவு உஷ்ணத்தால் அடிபடாமல் இருக்க வெண்டை செடிகளைச் சுற்றி கொத்தவரை செடிகளை வளர்க்கலாம். இதற்கு பூஸா நௌபஹார் ரகத்தை இடலாம். வெண்டை சாகுபடி செய்த நிலத்தைச் சுற்றி நான்கு புறங்களிலும் மரக்குச்சிகளை ஒரு அடி இடைவெளியில் நட்டுவிட வேண்டும். வயலினுள் வெண்டையை விதைக்கும்போது ஏற்கனவே நட்ட குச்சிகள் அடிப்பாகத்தில் குழியெடுத்து குழிக்கு இரண்டு விதை வீதம் கொத்தவரை விதையை விதைக்கலாம். கொத்தவரை செடிகள் வளர்ந்த மேல் கொத்தவரை செடிகளை குச்சியோடு சேர்த்து கட்டவேண்டும். கொத்தவரை செடிகள் வெண்டை செடிகள் வேர்களில் உஷ்ணக்காற்றின் பாதிப்பு இல்லாமல் கவனித்துக் கொள்கிறது. கொத்தவரை சாகுபடியில் ஒரு ஏக்கரில் ரூ.2,000 வருமானம் கிடைக்கிறது.

**வெண்டை அறுவடை:** நிலத்தில் விதைத்த 35-ம் நாள் முதல் அறுவடை கிடைக்கும்.

இரண்டு மூன்று நாட்கள் இடைவெளியில் அறுவடை கிடைக்கும். மொத்தமாக 20, 25 அறுவடை செய்யலாம். ஆனியில் பாடுபட்டு உழைத்தால் ஏக்கரில் நிகரலாபம் ரூ.28,000 வரை கிடைக்க வாய்ப்பு உண்டு.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

## நவீன தொழில்நுட்பம்

**இஞ்சி சாகுபடி நுட்பங்கள்:** இஞ்சி கடல்மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரம் வரையுள்ள வெப்ப மற்றும் ஈரப்பதமுள்ள உஷ்ண மண்டலப்பகுதிகளில் நன்கு வளரும். பொதுவாக மானாவாரி பயிராகவே சாகுபடி செய்யப்படுகிறது. பயிர் முளைத்துவரும்போது மிதமான மழையளவும் அதன் வளர்ச்சிப்பருவத்தில் அதிக மழையளவு மற்றும் அதிக மழைநாட்கள் மிகவும் அவசியம். நல்ல வடிகால் வசதியுள்ள அங்ககப் பொருட்கள் நிறைந்த மணல், களிமண் கலந்த குறுமண், சிவப்பு குறுமண் அல்லது லேட்டரைட் குறுமண் நிலங்களில் நன்கு வளரும்.

**இனப்பெருக்கம்:** இஞ்சி கரணைகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டி இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. ஒரு எக்டருக்கு 1500-1800 கிலோ விதை இஞ்சி கரணைகள் தேவைப்படும்.

பருவம்: இந்தியாவில் மேற்கு கடலோர பகுதிகளில் இஞ்சி மே மாதங்களிலும், வடகிழக்கு மாநிலங்களில் ஏப்ரல் மாதங்களிலும் இறவைப்பயிராக சாகுபடி செய்யும்போது பிப்ரவரி மாத இடையில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் பயிரிடப்பட்டு வருகிறது.

**வகைகள்:** சுக்கு உண்டாக்குவதற்கேற்ற வகைகள் - மாரன், நதியா, கரக்கால். அதிக ஒலியோ ரெசினுக்கு - ஏர்நாடு, சொ்நாடு, சீனா, ரியோடிஜெனிரா. அதிக எண்ணெய்க்கு - மாரன், கரக்கால். பச்சை இஞ்சி - சீனா, ரியோ-டி-ஜெனிரா, வயநாடு, லோக்கல், மாறன் வரதா.

இஞ்சி பயிரை சாகுபடி செய்ய பிப்ரவரி-மார்ச் மாதம் கோடைக்கால மழை கிடைத்தவுடன் நிலத்தை 4-5 முறை நன்றாக உழுது தயார் செய்ய வேண்டும். நிலத்தை நன்றாக கொத்தி பதமாக்க வேண்டும். அதன்பின் 15 செ.மீ. உயரம், 1 மீட்டர் அகலம் மற்றும் தேவையான நீளம் வைத்து பாத்திகளுக்கிடையே 40 முதல்

50 செ.மீ. இடைவெளியில் பார் அல்லது மேட்டுப்பாத்தி அமைக்க வேண்டும்.
**நடவு:** கோடைமழை கிடைத்தவுடனே இஞ்சி நடவு செய்ய வேண்டும். 20-25 கிராம் எடை மற்றும் 2.5 -5 செ.மீ. நீளம் உள்ள கரணைத்துண்டுகளைப் பாத்திகளில் 50 செ.மீ. x 50 செ.மீ (அ) 25 செ.மீ. x 25 செ.மீ. இடைவெளி அமைத்து சிறு குழிகளில் நடுதல் வேண்டும். திடகாத்திரமான ஒரு மொட்டாவது மேல்நோக்கி இருக்குமாறு நடவேண்டும்.
மாங்கோசெப் 0.3 சதம் மற்றும் மாலத்தியான் 0.1 சதம் ஆகிய மருந்துக்கலவையில் 30 நிமிடம் கரணைகளை ஊறவைத்திருக்க வேண்டும். பாக்டீரியா வாடல் நோய் இருக்குமானால் விதைக்கரணைகளை 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மருந்துக்கரைசலில் (30 லிட்டர் தண்ணீரில் 6 கிராம் மருந்து) விதைநேர்த்தி செய்ய வேண்டும்.
**உரமிடுதல்:** ஒரு எக்டருக்கு தொழு உரம் 25 முதல் 30 டன் மற்றும் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் முறையே 75, 50 மற்றும் 25 கிலோ இடவேண்டும். முழு மணிச்சத்து மற்றும் சாம்பல்சத்தை அடியுரமாக இடலாம். தழைச்சத்தை கரணைகளை விதைத்த 45வது நாளிலும் மறு பாதியை சாம்பல்சத்தும் சேர்த்து 90வது நாளிலும் மேலுரமாக இடவேண்டும்.
**மூடாக்கு:** நட்டவுடன் பாத்தி களில் ஒரு எக்டருக்கு 12.5 டன் பச்சை இலைகளை அடர்த்தியாக இட வேண்டும். மீண்டும் நட்ட 40 மற்றும் 90வது நாட்களில் 15 டன் அளவில் இடவேண்டும். இடையில்கைக்களை எடுப்பு செய்ய வேண்டும். நட்ட 5 மற்றும் 6வது மாதங்களில் மீண்டும் களை எடுக்க வேண்டும். நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
**அறுவடை, மகசூல்:** இஞ்சி காய்கறிக்காக பயன்படுத்துவதாக இருந்தால் ஆறு மாதத்தில் அறுவடை செய்ய வேண்டும். சுக்கு (உலர்ந்த இஞ்சி) தயாரிக்க பொதுவாக 245 முதல் 260 நாட்களில் (இலைகள் மஞ்சள் நிறமாக மாறும்போது) அறுவடை செய்ய வேண்டும். சுத்தம் செய்ய கரணைகளை நீரில் கழுவி கூர்மையான மூங்கில் கொண்டு தோலை அகற்றி சுத்தமான தரையில் சீராக பரப்பி 3-9 நாட்கள் காயவைக்க வேண்டும். அவ்வப்போது அவற்றை புரட்டிவிட வேண்டும். ஒட்டிக்கொண்டிருக்கும் தோலை அகற்றி பின் பைகளில் நிரப்பி

குளிரான இடத்தில் சேமிக்க வேண்டும். ஒரு எக்டருக்கு 20-25 டன்கள் பச்சை இஞ்சி மகசூலாகக் கிடைக்கும்.

**நோய்கள்:** கரணை அழுகல்: மான்கோசெப் 0.3 சதம் கரைசலில் அறுவடை செய்தவுடன் விதைக்கரணைகளை வைத்திருந்து நடவேண்டும்.

**பாக்டீரியா அழுகல்:** ஸ்ட்ரெப்டோசைக்ளின் கலவையில் விதைநேர்த்தி செய்ய வேண்டும். (தகவல்: வே.தொண்டைமான், வானவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், கோவை).

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## வாழை தரும் உபதொழில்கள்

வாழை விவசாயத்தில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 5 லட்சம் எக்டேரில் ஒரு கோடியே 70 லட்சம் டன் வாழை உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் ஒரு லட்சம் எக் டேரில் வாழை விவசாயம் நடக்கிறது. ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில்தான் அதிக அளவில் வாழை விவசாயம் நடக்கிறது. அதனால்தான் நாடு முழுவதுக்குமான வாழை ஆராய்ச்சி நிலையத்தை திருச்சி பெற்றுள்ளது.

இவ்வளவு இருந்தும் வாழை விவசாயிகள் உபபொருட்களை தயாரிக்க கற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். இந்தக்குறையை தவிர்க்க வாழை ஆராய்ச்சி மையத்தில் 20 விதமான வாழை உபபொருட்களை தயாரிக்கலாம் என கண்டறிந்து அறிவித்துள்ளனர்.

மகாராஷ்டிரா, குஜராத், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்துகூட வாழை உபபொருள் தயாரிப்பு குறித்து கேட்டுத் தெரிந்துகொள்கின்றனர். ஜப்பானில் நார்ச்சத்துள்ள வாழை அதிகமாக விளைவிக்கப்படுகிறது. வாழை நாரில் இருந்து ஆடை தயாரித்து பயன்படுத்துகின்றனர்.

ஜப்பான் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு நார்ச்சத்துடன் கூடிய வாழை ரகத்தை இங்கு பயிரிடுவது, வாழை நார் ஆடை தயாரிப்பது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறுவதிலும் திருச்சி வாழை ஆராய்ச்சி நிலையம் இங்கு ஈடுபட்டுள்ளது. உயர்ரக கலப்பின புதிய வாழையை

உருவாக்குவதில் வாழை ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இரண்டொரு மாதங்களில் இந்த உயர்ரக நார்ச்சத்துடன் கூடிய வாழை அறிமுகம் செய்யப்படும். வாழையில் இருந்து விதவிதமான உணவுப்பொருட்களுடன் பாய், காகிதம் போன்ற பிற பொருட்களையும் தயாரிக்கலாம். இப்படி வாழையில் இருந்துபிற பொருட்களை தயாரிக்க நமது விவசாயிகளும் தொழில் முனைவோர்களும் முன்வரவேண்டும். நபார்டு நிறுவனம் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும், உரிய பயிற்சியையும் வழங்குகிறது. தேவைப்பட்டால் கடனுதவியையும் பெற்றுத்தருகிறது. இதற்காக 16 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான மூன்று திட்டத்தை நபார்டு நிறு வனம் விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது.

இந்தியன் பாங்க், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஸ்டேட் பாங்க், திருவாங்கூர் பாங்க், மத்திய கூட்டுறவு வங்கி ஆகிய 5 வங்கிகள் கடனுதவி தருவதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மேலும் விபரங்களுக்கு:** தேசிய வாழை ஆராய்ச்சி நிலையம், இந்திய அரசு, தோகைமலை ரோடு, தாயனூர் அஞ்சல், திருச்சி. போன்: 261 8104, 261 8106. மற்றும் நபார்டு வங்கி, நெ.15, முதல் மாடி, சாஸ்திரி ரோடு, தென்னூர், திருச்சி-17.

**எம்.ஞானசேகர், தொழில் ஆலோசகர்.**

## விவசாயிகள் எளிய முறையில் பஞ்சகவ்யம் தயாரித்தல்

இயற்கை முறையில் பஞ்சகவ்யம், கிராமத்தில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு, நாமே தயார் செய்துகொள்ளக்கூடிய ஒரு அடர் கலவை ஆகும். இதை பயன்படுத்தி குறைந்த செலவில் பயிர்களை ஊக்குவித்து, ரசாயன உரங்களை, பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தாமல் அதிகப்படியான மகசூலைப் பெறலாம். நிலம் செழிப்படையும். விளைச்சல் பெருகும். செலவு குறைக்கப்படும்.

**பஞ்சகவ்யம் - நன்மைகள்:**

1. ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துவது முழுமையாக தவிர்க்கப்படுகிறது. 2. செடியின் வளர்ச்சியை தூண்டி நல்ல வளர்ச்சி அடையச் செய்கிறது. 3. நுண்ணூட்டக் குறைபாட்டை நீக்குகிறது. 4. பூச்சிகளை

விரட்டியடிக்கிறது. 5. பயிரின் நோய் எதிர்ப்பு ஆற்றலை வளர்க்கிறது.

*பஞ்சகவ்யம் தயாரித்தல்:* தேவைப்படும் பொருட்கள்: பசு சாணம் - 5 கிலோ, நெய் - அரை லிட்டர், 5 நாள் புளித்த தயிர் - 2 லிட்டர், பால் - 2 லிட்டர், மாட்டு மூத்திரம் - 3 லிட்டர், கரும்பு வெல்லம் - கால் லிட்டர், இளநீர் - 2, தண்ணீர் - 3 லிட்டர், ஒரு கை அளவு பயிர் செய்யும் நிலத்தின் மண், ஒரு கை அளவு சுண்ணாம்பு

*குறிப்பு:* தயாரிக்கும் கலனை / பிளாஸ்டிக் பாத்திரத்தை நன்கு கழுவ வேண்டும்.

*தயாரிக்கும் முறை:* 1. முதல் நாள் - சாணம் 5 கிலோ, நெய் அரை லிட்டர், ஒரு கையளவு பயிர் செய்யும் நிலத்தின் மண், ஒரு கையளவு சுண்ணாம்பு இந்த மூன்றையும் நன்கு பிசைந்து 5 நாள், கலன் / பிளாஸ்டிக் பாத்திரத்தின் வாயை ஈரத்துணியால் மூடவேண்டும். 2. 6ம் நாள் - 2 லிட்டர் பாலில் மோர் கலந்து 2 லிட்டர் தயிராக புளிக்க வைக்க வேண்டும். 3. 10ம் நாள் தனியாக வேறொரு வாளியில், கீழ்கண்டவைகளை ஊறவைக்க வேண்டும்.

2ல் உள்ள புளித்த தயிர்-2 லிட்டர், பால் -2 லிட்டர், மாட்டு மூத்திரம்-3 லிட்டர், கரும்புவெல்லம்-கால் லிட்டர், இளநீர்-2, தண்ணீர்-3 லிட்டர். இவற்றையெல்லாம் வேப்பம் குச்சியைக் கொண்டு தினமும் காலை, மாலை இரண்டுதரம் 3 நிமிடங்கள் வரை (6 நாட்கள்) கலக்கிவிட வேண்டும்.

4. 10ம் நாளில் இந்த கலவையுடன் வாழைப்பழங்கள் (சுமார் 5 எண்ணிக்கை அழுகிய பழங்கள்) இதனுடன் கிடைத்தால் வேப்பம்பழங்கள், பலாப்பழம் ஆகியவற்றை சேர்த்து ஒரு துணியில் கட்டி இந்த கலவையினுள் தொங்கவிட வேண்டும். வேப்பம்பழம் கிடைக்கவில்லையென்றால் வேப்பங்கொட்டØயை இடித்து சேர்த்துக்கொள்ளலாம்.

ஆ) தொங்கவிட்டிருந்த பழங்கள் கொண்ட துணியை திறந்து பழங்களை கலவையில் நன்கு கலந்திட வேண்டும்.

21ம் நாள் முடிவில் கிடைப்பது பஞ்சகவ்ய கரைசல் ஆகும். பயன்படுத்தும் அளவு - ஒரு லிட்டர் பஞ்சகவ்ய கரைசலை 30 முதல் 50 லிட்டர் நீரில் கலந்து பஞ்சகவ்யமாக பயன்படுத்தலாம்.

**பஞ்சகவ்யம் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டியவை:**

1. தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் கலன்கள், பாத்திரங்கள் கண்டிப்பாக மண்/பிளாஸ்டிக் பாத்திரங்களாகவோ அல்லது சிமென்ட் தொட்டியாகவோதான் இருக்க வேண்டும். முக்கிய *குறிப்பு:* பாத்திரங்களை நன்கு கழவி பயன்படுத்த வேண்டும்.

2. பாத்திரங்களின் வாய்பகுதி எப்பொழுதும் திறந்து துணியால் மூடியதாக இருக்க வேண்டும். தயாரிக்கும் வேளையில், காற்றிலுள்ள பிராணவாயு தேவைப்படுகிறது. கரைசலில் இருந்து மீத்தேன் போன்ற நச்சு வாயுக்கள் வெளியேறுகிறது. இவை நுண்ணுயிர் வளர்ச்சிக்கு உகந்தவையல்ல. எனவே இவைகள் வெளியேற தடைகள் ஏதும் இருக்கக்கூடாது.

3. மூலப்பொருட்கள் நன்கு கலக்கப்பட வேண்டும். தினம் காலை, மாலை 2 வேளை3 நிமிடங்கள் வேப்பம் குச்சியைக் கொண்டு கலக்க வேண்டும். இதன்மூலம் நுண்ணுயிர்கள் அதிகரிக்கின்றன.

4. மூலப்பொருட்கள் கலந்த பாத்திரத்தை நிழலில் வைக்க வேண்டும். இது மிக முக்கியமானது.

5. சாணம் பயன்படுத்துவதால் தெளிப்பானில் அடைப்பு ஏற்பட வாய்ப்புண்டு.ஆகையால் வடிகட்டி பயன்படுத்த வேண்டும். மற்றும் விசைத்தெளிப்பான் பயன்படுத்தும்போது வால்வின் துளையினை பெரிதாக மாற்றி அமைக்க வேண்டும.

6. பயன்படுத்துவதற்கு முன் தெளிப்பானை நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

7. பஞ்சகவ்யத்தினை காலை அல்லது மாலை நேரங்களில் பயிருக்கு தெளிப்பது சிறந்தது.

**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

## வறட்சி தடை இல்லை மூன்று போகமும் நெல் விளைவிக்கும் அகரம் விவசாயிகள்

செய்யூர்:சித்தாமூர் ஒன்றியத்தில் உள்ள அகரம் கிராமத்தில், நல்ல நீர்வளம் உள்ளதால், மூன்று போகமும் நெல் பயிரிடப்படுகிறது.

தண்ணீர் சிக்கனம்

சித்தாமூர் ஒன்றியத்தில் உள்ளது அகரம் கிராமம். இங்கு, 1,500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இம்மக்களின் முக்கிய தொழில் விவசாயமாகும். இங்கு சித்தேரி, பெரிய ஏரி என, இரண்டு ஏரிகள் உள்ளது. மழையால் ஏரியில் சேகரமாகும் நீரை விணாக்காமல், சிக்கனமாக பயன்படுத்துவதால், நிலத்தடி நீர் மட்டம் இங்கு குறையாமல் உள்ளது.

ஏரி நீரிலேயே இரண்டு போகம் பயிர் செய்து விடும் விவசாயிகள், பின்னர், கிணற்று பாசனத்தை பயன்படுத்தி, மூன்றாவது போகமும் பயிரிடுகின்றனர். இங்குள்ள கிணறுகளில், 30 அடி முதல் 45 அடியிலேயே தண்ணீர் உள்ளது. இதனால், இங்குள்ள மக்கள் 3 போகமும் நெல் பயிரிட்டு, சாதனை படைக்கின்றனர்.

இதுகுறித்து, இங்குள்ள விவசாயி தியாகு கூறியதாவது:

கால்வாய் பராமரிப்பு

எனக்கு சொந்தமாக, 4 ஏக்கர் நிலம் உள்ளது. ஏரியின் கரை அருகிலேயே எங்கள் நிலம் உள்ளது. எங்கள் கிராமத்தைச் சுற்றி, ஆண்டார்குப்பம், மாம்பாக்கம் கயநல்லூர், இல்லீடு ஆகிய ஏரிகள் உள்ளதால், நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் உள்ளது.

மேலும் எங்கள் வயல்வெளிக்கு வரும், கால்வாய்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தில் சரி செய்யப்பட்டுள்ளதால், ஏரியிலிருந்து வயல்களுக்கு செல்லும் நீர் வீணாகாமல் செல்கிறது. இதனால், மூன்று போகமும் பயிர் செய்ய முடிகிறது. எப்போதும் என் கிணற்றில் தண்ணீர் இருப்பதால், மூன்று போகமும் விளைவிக்க முடிகிறது. இதே போல், எங்கள் கிராமத்தில் உள்ள அனைவரும், மூன்று போகம் பயிர் செய்கின்றனர். தற்போது ஏடிடி 43 ரக நெல்லை அதிகம் பேர் பயிர் செய்துள்ளனர். ஒரு சிலர் குண்டு நெல் பயிர் செய்துள்ளனர்.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## வறண்டு கிடக்கும் ஆண்டேரியால் விவசாயிகள் அவதி

மப்பேடு:கீழச்சேரியில் உள்ள ஆண்டேரி, தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. இதனால், ஏரிப் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். மப்பேடு அடுத்து உள்ள கீழச்சேரி ஊராட்சியில் உள்ளது ஆண்டேரி. இந்த ஏரியை

நம்பி, கீழச்சேரி, மேட்டுச்சேரி, கொண்டஞ்சேரி, செய்யம்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள, எட்டு கிராமங்களில், 300
ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இதன் மூலம், 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களது விளை
நிலத்தில் நெல் பயிரிட்டு வந்தனர்.

ஆண்டுதோறும் பருவ மழையின் போது, இந்த ஏரியில் தண்ணீரை விவசாயிகள் தேக்கி வைத்து, மதகுகள் மூலம் தங்களது விளைநிலத்துக்கு தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்வது வழக்கம். இவ்வாறு ஆடி மாதத்தில், நெல் விதைத்து உழவுப் பணியை மேற்கொள்வர்.

ஆனால் இவ்வாண்டு, இதுவரை மழை பெய்யாததாலும், கடும் வெயிலாலும் ஏரி வறண்டு, வெடிப்பு களுடன் காணப்படுகிறது.

இதுகுறித்து, இப்பகுதி விவசாயி குமார் என்பவர் கூறுகையில், ""ஆண்டேரி வறண்டு வெடிப்புகளுடன் உள்ளதால், இனி மழை பெய்தாலும், தண்ணீரை ஏரி உறிஞ்சும். இதனால் மழை நீரை தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளது. ஆழ்துளை கிணறு மூலம், தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யலாம் என, பார்த்தாலும், நிலத்தடி நீர்மட்டம், 100 அடிக்கு குறைவாக உள்ளது. இதனால், நாங்கள் பயிர் செய்ய முடியாமல் அவதிப்பட்டு வருகிறோம்." என்றார்.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத கடம்பத்தூர் ஒன்றிய வேளாண்மை துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், ""ஆண்டுதோறும் பருவ மழையானது மே மாதத்தில் துவங்கும். இவ்வாண்டு பருவ மழை இன்னும் துவங்கவில்லை. இதனால், ஏரிகள் தண்ணீரின்றி வறண்டு உள்ளன. இதனால், ஏரிப் பாசனத்தை நம்பி பயிரிடும் விவசாயிகள், பயிர் செய்ய முடியாமல்
அவதிப்பட்டு வருகின்றனர்" என்றார்.

## முளைப்பு திறன் இல்லாத விதைகள் நாற்று பற்றாக்குறையால் தவிப்பு

விளக்கணாம்பூடி:வேளாண் விரிவாக்க மையத்தில் வாங்கிய விதை நெல், முளைப்பு திறன் இல்லாமல் போனதால், நடவு செய்ய போதுமான நாற்று கிடைக்கவில்லை. முளைக்கும் என, நம்பிக்கையுடன் விதைத்த விவசாயி, கலக்கத்தில் உள்ளார்.

ஆர்.கே.பேட்டை வேளாண் விரிவாக்க மையம், வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் செயல்படுகிறது. இங்கு, விவசாயிகளுக்கு விதை நெல், வேளாண் கருவிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மண் பரிசோதனை செய்து, அதற்கு தகுந்த பயிர்கள் பரிந்துரை செய்கின்றனர். இதன் மூலம் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். கடந்த மாதம் பொன்னி விதை நெல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டன.

ஒரு கிலோ, 27.50 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டது. இதன்படி, விளக்கணாம்பூடியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், 84 கிலோ பொன்னி விதை நெல்லை வாங்கிச் சென்றார். இதன் மூலம், இரண்டு ஏக்கருக்கு நடவு செய்ய திட்டமிட்டிருந்தார். விதை நெல்லை விதைத்த பின், வயலுக்கு தண்ணீர் பாய்ச்சி, ஏர் உழுது, நடவு வயலை தயார் செய்யும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளார். இந்நிலையில், நாற்றாங்காலில் விதைத்த நெல், 14 நாட்கள் ஆகியுள்ள நிலையில், விதைகள் ஆங்காங்கே விட்டு விட்டு முளைத்துள்ளன. 60 சதவீதம் விதைகள் முளைக்கவில்லை. இனியும் முளைக்கும் என, நம்பிக்கை இல்லை.

முளைத்தாலும் சம வயதுள்ள நாற்றுகள் கிடைக்காது. முளைத்துள்ள நாற்றுகளை கொண்டு, அரை ஏக்கரில் மட்டுமே நடவு செய்ய இயலும். உரிய பட்டத்தில் பயிர் செய்ய முடியாவிட்டால், போதிய விளைச்சல் கிடைக்காது. பட்டத்தில் பயிர் செய்ய போதுமான நாற்று கைவசம் இல்லை என்பதால், விவசாயி கலக்கத்தில் உள்ளார். வேளாண் விரிவாக்க மையத்தில் வாங்கிய விதை நெல்லின் முளைப்பு திறன் பொய்த்து போனதால், மற்ற விவசாயிகள் தனியார் விதை மையங்களை நாடி வருகின்றனர்.

அனுப்பம்பட்டு,
மீஞ்சூர்,
நந்தியம்பாக்கம்
உள்ளிட்ட
பகுதிகளில்
நிலத்தடி நீர் குறைந்து,

இருக்கும் நீரும்

உவர்ப்பாக மாறி உள்ளது

அபராதம் எவ்வளவு?

விதிகளை மீறி லாரியில் குடிநீர் எடுத்து சென்றால், சென்னை பெருநகர நிலத்தடிநீர் வரன்முறை சட்டம், 1988ன் படியும், விதிகள், 1989ன் படியும், 2,000 ரூபாய் அபராதமும், இரண்டாம் முறை அதே செயலில் ஈடுபட்டால், 5,000 ரூபாய் அபராதமும் வசூலிக்கப்படும் என, எச்சரிக்கப்பட்டு உள்ளது.

மீண்டும் தொடர்ந்தால், இரண்டாம் முறை பிடிபட்ட நாளில் இருந்து, மூன்றாம் முறை பிடிபட்ட நாள் வரை, தினமும், 500 ரூபாய் என, கணக்கிட்டு அபராதம் விதிக்கப்படும். மேலும், அனுமதியின்றி ஆழ்துளை மோட்டார் மூலம், குடிநீர் விற்பனை செய்யும் உரிமையாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதுடன், வாகனம் மற்றும் மின்சாதன உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும்.

## மழையால் நெல் மூட்டைகள்சேதம்: விவசாயிகள் கலக்கம்

திருவண்ணாமலை: சேத்துப்பட்டு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் இடம் இல்லாததால், திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த 2,000 நெல் மூட்டைகள் மழைக்கு சேதமானது.சேத்துப்பட்டில் ஒழுங்கு முறை விற்பனை கூடம் உள்ளது, இங்கு திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், ஆகிய மாவட்டங்களிலிருந்து பல்வேறு பகுதி விவசாயிகள் தங்களது விளைபொருட்களான நெல், மணிலா, நவதானியங்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

சேத்துப்பட்டில் உள்ள விற்பனை கூடத்தில், விவசாய பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதால் இங்கே கொண்டு வருவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர், இந்த மார்க்கெட் கமிட்டி நெல் கொள்முதல் செய்வதில் தமிழகத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆடிப்பெருக்கு என்பதால் தற்போது இந்த கமிட்டிக்கு நெல் வரத்து அதிகமாக உள்ளது.நேற்று முன்தினம் சேத்துப்பட்டு மற்றும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 5,000க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகளை கொண்டு வந்தனர். ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் உள்ள குடோனில் இடம் இல்லாததால், வெட்ட வெளியில் உள்ள களத்தில் விவசாயிகள்

தங்களுடைய, 2,000 நெல் மூட்டைகளை அடுக்கி வைத்திருந்தனர்.திடீரென நேற்று முன்தினம் மாலை, 6 மணி அளவில் கன மழை பெய்தது. இதில், வெட்ட வெளியில் வைக்கப்பட்டிருந்த, 2,000 நெல் மூட்டைகள் நனைந்து சேதமாயின, இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:சேத்துப்பட்டு ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு தினசரி, 5 மாவட்டங்களிலிருந்து, 5ஆயிரம் நெல் மூட்டை முதல், 7,000 நெல் மூட்டைகள் வருகின்றன. கடந்த, நான்கு மாதமாக கடும் வறட்சியால், 5 ஆயிரம் மூட்டைகள் மட்டுமே கொள்முதல் செய்ய அனுமதிக்கின்றனர்.இதனால், விவசாயிகள் சிலர் அவலூர் பேட்டை, செஞ்சி போன்ற மார்க்கெட் கமிட்டிக்கு கொண்டு செல்கின்றனர். விவசாயிகளுக்கு மன வேதனையும், வீண் செலவும் ஏற்படுகிறது, இது தவிர ஒழுங்கு முறை கமிட்டிக்கு, எடை போடும் தொழிலாளிகளுக்கும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது."இனி வரும் காலங்களில் சேத்துப்பட்டில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் மேலும் குடோன்கள் அமைக்க வேண்டும்' என கோரிக்கை விடுத்துள்ளனர்.

### முருங்கை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

திண்டிவனம் : திண்டிவனம் பகுதியில் உள்ள விவசாயிகள் முருங்கை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.திண்டிவனம் அருகே உள்ள ஒலக்கூர், ஏப்பாக்கம், சலவாதி, உள்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் செடி முருங்கை சாகுபடி செய்து வருகின்றனர். கிராமங்களில் முருங்கை மரத்தின் கிளையை உடைத்து நட்டால் துளிர் விட்டு காய் காய்க்கும்.விதை

இந்த முருங்கை, விதை மூலம் மட்டுமே துளிர் விட்டு காய் காய்க்கும். ஒரு முருங்கை காய் 2 அடியில் இருந்து 4 அடி நீளம் வரை காய்க்கும். அதிக தண்ணீர், உரம், பூச்சி கொள்ளி மருந்துகள் தேவைப்படாது. களை எடுக்கும் செலவு இல்லை. இதனால் இந்த பகுதி விவசாயிகள் முருங்கை செடி பயிர் செய்வதில் அதிகஆர்வம் காட்டி வருகின்றனர்.தற்போது மழைக்காலம் துவங்கியதால் செடி தழைத்து வளர்ந்து பூத்து வருகிறது. இதனால் காய்ப்புத் திறன் குறைவாக உள்ளது. இந்த முருங்கை காய்க்கு சென்னை கோயம்பேடு மற்றும் உள்ளூர் மார்க்கெட்டிலும் கிராக்கியுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

## மேய்ச்சலுக்கு புற்கள் இன்றி கால்நடைகள் ஏமாற்றம்

தியாகதுருகம் : மழையின்றி மேய்ச்சல் நிலங்களில் உணவு கிடைக்காமல் கால்நடைகள் பாதிப்பதால் இத்தொழிலை நம்பியுள்ள பலர் வேறு தொழிலுக்கு மாற திட்டமிட்டுள்ளனர்.

பருவமழை ஏமாற்றியதன் விளைவால் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் வறட்சி நிலவுகிறது. கடந்த கோடையில் வெயில் தாக்கம் அதிகமாக இருந்ததால் தரிசு நிலங்களில் வளர்ந்திருந்த புற்கள் கருகியது.

சிக்கல்

மந்தைகளாக ஆடு, மாடுகளை வளர்ப்பவர்களுக்கு சோதனை காலமாக அமைந்தது. தென் மாவட்டங் களில் இருந்து மேய்ச்சலுக்கு கால்நடைகளை விழுப்புரம் மாவட்டத்திற்கு ஓட்டி வந்தவர்களுக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேய்ச்சலுக்கு போதிய புல் கிடைக்காமல் கால்நடைகள் மெலிந்தன.

விற்பனை

பலர் தாங்கள் வளர்த்த ஆடு, மாடுகளை கிடைத்த விலைக்கு விற்றனர். சிலர் நம்பிக்கையுடன் இருந்தாலும் போதிய உணவு கொடுக்க முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

தென்மேற்கு பருவமழை துவங்கியதும் தரிசு நிலங்களில் புற்கள் வளர்ந்து கால்நடைகளுக்கு போதிய உணவு கிடைக்கும். இன்னும் எதிர்பார்த்த மழை பெய்யாமல் ஏமாற்றி வருவதால் மேய்ச்சல் நிலங்கள் வறண்டு கிடக்கின்றன. புற்கள் வளரும் என்று எதிர்பார்த்த நிலையில் மேய்ச்சல் நிலங்கள் காய்ந்து கிடப்பதால் கால் நடை களுக்கு போதிய உணவு கிடைக்காமல் பல கி.மீ., தூரத்திற்கு ஓட்டிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.தொழில் மாற திட்டம்இதனால் மேய்ச்சல் தொழிலை நம்பியுள்ள பலருக்கும் நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகி, அவர்கள் வேறு தொழிலுக்கு மாற திட்டமிட்டுள்ளனர்.

## சீமை பசு மீதான விவசாயிகளின் மோகம் அதிகரிப்பு :அழியும் தருவாயில் நாட்டு இன பசுக்கள்

சேலம்: சேலம் மாவட்டத்தில் சீமை மற்றும் கலப்பின பசு வளர்ப்பதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் பாரம்பரியமிக்க நாட்டு இன பசுக்கள் அழியும் தருவாயில் உள்ளன.தமிழகத்தில் உள்ள, 75 சதவீத விவசாயிகள், தங்கள் விவசாய தொழிலோடு சேர்த்து பசு வளர்ப்பை பிரதானமாக செய்து வருகின்றனர். பசுக்களை தெய்வமாக வழிபடும் வழக்கம் நம்மிடம் இருந்து வருகிறது. சில ஆண்டுகள் முன் வரை, நாட்டு இன பசுக்களை விவசாயிகள் வளர்த்து வந்தனர். அதன் பின்னர் கலப்பின மற்றும் சீமை பசுக்கள் மீது விவசாயிகளின் பார்வை திரும்பியது.நாட்டு பசுக்களை காட்டிலும் சீமை பசுக்கள் இரண்டு மடங்கும் கூடுதலாக பால் தரும் என்பதால், லாப நோக்கத்தை மனதில் வைத்து, விவசாயிகள், ஜெர்சி உள்ளிட்ட வெளி நாட்டு பசுக்களை அதிகம் வாங்க ஆரம்பித்தனர். சில ஆண்டுகளாக மழை இல்லாமல் விவசாயம் பொய்த்து போனதால், விவசாயிகள் பால் உற்பத்தியில் ஈடுபட ஆரம்பித்தனர்.இதனால் நாட்டு இன பசுக்களை விட, சீமை பசுக்கள் வளர்ப்பதிலேயே விவசாயிகள் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றனர். இது குறித்து கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:சீமை பசுக்களான ஜெர்சி, ஹெச்.எப். கிராஸ் ஆகிய பசுக்கள் முறையே, 10, 20 லிட்டர் பால் தரும். இதில் ஹெச்.எப். கிராஸ் வகை பசு, குளிர்ச்சியான இடங்களில் மட்டுமே இருக்கும். ஆனால் ஜெர்சி பசு அனைத்து வகை சீதோஷ்ண நிலையில் வாழ கூடியது.இதனால் ஜெர்சி பசுக்களை தற்போது விவசாயிகள் அதிகளவில் வளர்த்து வருகின்றனர். நாட்டு பசுக்கள் நாள் ஒன்றுக்கு, மூன்று முதல், ஐந்து லிட்டர் வரை மட்டுமே பால் தரும் என்பதால், அதை வளர்க்க விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை.சேலம் மாவட்டத்தில் தற்போது, 5 லட்சத்து, 50 ஆயிரத்து, 957 பசு மாடுகள் உள்ளன. இதில், 20 சதவீதம் மட்டுமே நாட்டு இன பசுக்கள் . 70 சதவீதம் ஜெர்சி பசுக்கள். கடந்த ஆண்டை விட, 5 சதவீதம் நாட்டு பசுக்கள் எண்ணிக்கை குறைந்து உள்ளது. இதே நிலை நீடித்தால், இன்னும், மூன்று ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் நாட்டு பசுக்களே இல்லாமல் போய் விடும், என்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்70.54 அடியாக உயர்வு

மேட்டூர்: தொடர் நீர்வரத்து காரணமாக, மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 70.54 அடியை எட்டியது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால், கர்நாடகாவின் கபினி அணையிலிருந்து உபரி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. தொடர்ந்து, 20 நாட்களாக உபரிநீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.நேற்று முன்தினம், 69.010 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 70.54 அடியாகவும், நீர் இருப்பு நேற்று, 33 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. வினாடிக்கு, 18,359 கனஅடி நீர் வந்தது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், கபினி உபரி நீர்திறப்பு நேற்று, 8,000 கனஅடியாக குறைக்கப்பட்டதால், வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்வரத்து குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது

## வெற்றிலை விவசாயிகள் முடிவுராஜா வாய்க்காலில் தண்ணீர்திறக்காவிட்டால் சாலை மறியல்

ப.வேலூர்: "விவசாயிகளின் பயன்பாட்டுக்காக, ராஜா வாய்க்காலில் தண்ணீர் திறக்காவிட்டால், சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும்' என, வெற்றிலை விவசாயிகள் நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்க நிர்வாகக்குழு கூட்டம், சங்க அலுவலகத்தில் நடந்தது. சங்கத் தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். செயலாளர் ஜெயபால் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில், ப.வேலூர் காவிரிக்கரையில் உள்ள ராஜா வாய்க்காலில், கடந்த நான்கு மாதமாக, தண்ணீர் திறந்து விடவில்லை. தற்போது, கர்நாடகா நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால், உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்படுகிறது. அதனால், மேட்டூர் அணை நீர் மட்டும் உயர்ந்துள்ளது.

அதன் காரணமாக, குடிநீர் தேவைக்காக, மேட்டூர் அணையில் இருந்து, 3,000 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. ராஜா வாய்க்காலில், பத்து நாட்களுக்கு முன், தண்ணீர் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், பொதுப்பணித்துறையினர் கடந்த, நான்கு மாதமாக மெத்தனமாக இருந்து விட்டு, தற்போதுதான், வாய்க்கால் தூர் வாரும் பணியை மேற்கொண்டுள்ளனர்.அதனால், ராஜா வாய்க்கால்

பாசனத்தை நம்பி உள்ள வெற்றிலை கொடிக்கால், வாழை, நெல், கோரை, கரும்பு, குச்சிக்கிழங்கு பயிரிடும் விவசாயிகள் அவதிக்குள்ளாகி உள்ளனர்.வெற்றிலை கொடிக்கால் விவசாயிகள், வாய்க்காலில் வரும் சாக்கடை கழிவுநீரை, ஆயில் இன்ஜின் மூலம் பாசனம் செய்து வரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, ராஜா வாய்க்காலில் உடனே தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இல்லாவிட்டால், அனைத்து விவசாய சங்கங்கள் மற்றும் விவசாயிகளை திரட்டி, சாலை மறியல் நடத்துவது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## காய்கறிகள் விலை குறையும்: சரத் பவார்

புதுடில்லி:காய்கறிகளின் விலை, கூடிய விரைவில், படிப்படியாக குறையும் என, மத்தியவேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.
நாட்டின் பல மாநிலங்களில், கடுமையான மழைப் பொழிவு இருந்து வருகிறது. இதனால், சரக்கு போக்குவரத்து, மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே, குறிப்பிட்ட சில காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.
இந்த விலைஉயர்வு தற்காலிகமானதுதான்.கூடிய விரைவில் இவற்றின்விலை குறையும். மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில், மழைப் பொழிவு அதிகமாக உள்ளது. சந்தை களுக்கு, வெங்காயம் வரத்து, அதிகரிக்கும் நிலையில், அதன் விலை குறையும். இவ்வாறு பவார் கூறினார்.
கடந்த மாதம் புதுடில்லியில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 19 ரூபாயாக இருந்தது. இது தற்போது, 31 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதேபோன்று, உருளைக்கிழங்கின் விலையும், 18 ரூபாயிலிருந்து, 22 ரூபாயாக உயர்ந்துள்ளது.இவைதவிர, கடந்த மாதம், ஒரு கிலோ தக்காளியின் விலை, 18 ரூபாயாக இருந்தது. இது, தற்போது சில்லரை விற்பனையில், 60 ரூபாயாக மிகவும் அதிகரித்துள்ளது.மேலும் ஒரு சில மாநிலங்களில்,ஒரு கிலோ தக்காளியின் விலை, 60-80 ரூபாய் என்ற அளவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## திண்டுக்கல் மாவட்ட அணைகளுக்கு நீர்வரத்து எதிர்பார்ப்பு! மழையின்றி குடிநீர் சப்ளை, விவசாயிகள் பாதிப்பு

பழநி:திண்டுக்கல் மாவட்டத்தில் அணைகள் வறண்டு வருவதால், குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பழநி வட்டார விவசாயத்திற்கு ஆதாரமாக உள்ள அணைப்பகுதிகளில் போதிய மழை பெய்யாத காரணத்தால், நீர்மட்டம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. அதனை சுற்றியுள்ள விவசாயப் பணிகளுக்கு தேவையான பாசன தண்ணீர் வெளியேற்றமும் குறைந்துள்ளதால், விவசாயப்பணிகள் பாதிப்பு அடைந்துள்ளன.

வரதமாநதி அணையிலிருந்து வரும் தண்ணீரை எதிர்பார்த்து, விவசாயப்பணிகளை துவங்கியுள்ள பழநி வையாபுரி குளத்துக்கரை பாசன விவசாயிகள் பலர் நெல்நடவுபணிகளை மேற்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். மழையை நம்பி நடவுப்பணிகளை செய்துள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பழநியை பொறுத்தவரை பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து குடிநீர் பெறும் 10 வார்டுகளுக்கு தற்போது குடிநீர் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அப்பகுதிகளுக்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறை லாரி மூலம் குடிநீர் வழங்க நகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

வையாபுரி குளத்துக்கரை பாசன விவசாயிகள் சங்கச் செயலாளர் ரத்தினம் கூறுகையில்," பருவமழைபெய்யும், அணைகள், குளங்களில் தண்ணீர் நிரம்பும் என்ற நம்பிக்கையில் 40 ஏக்கர் பரப்பளவில் விவசாயப்பணிகளை மேற்கொண்டுள்ளோம். கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. மழை பெய்ந்தால் மட்டுமே விமோசனம்,' என்றார்.

நேற்றைய நீர்மட்டம்:

* பாலாறுபொருந்தலாறு அணையில் 7 கன அடி குடிநீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 20 அடி (மொத்த உயரம் 65 அடி).

* குதிரையாறு அணையில் 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 21.26 அடி (மொத்த உயரம் 80 அடி).

* வரதமாநதி அணையில் 2 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது.

நீர்மட்டம் 22 அடி (மொத்த உயரம் 67 அடி).

* பரப்பலாறு அணை நீர்மட்டம் 29.03 அடி (மொத்த உயரம் 90 அடி).

* நங்காஞ்சியாறு ஆறு அணையில் நீர்மட்டம் 19.95 அடி (மொத்த உயரம் 40 அடி), குடகனாறு அணையில் நீர்மட்டம் 8.55 அடி (மொத்த உயரம் 27.4 அடி)

* ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கம்-4 அடி(மொத்த உயரம் 23.5 அடி)

குடிநீர் தட்டுப்பாடு: மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.நிலக்கோட்டையில் 25 நாட்களுக்கு ஒருமுறையும், கொடைக்கானலில் 12 நாட்களுக்கு ஒருமுறையும், திண்டுக்கல்லில் 8 நாட்களுக்கு ஒருமுறையும் குடிநீர் சப்ளையாகிறது.

கண்டுகொள்ளாத அதிகாரிகள்

அடியனூத்து பஞ்சாயத்திற்குட்பட்ட முத்தமிழ் நகர் பகுதியில் கடந்த ஒரு மாதமாக குடிநீர் சப்ளையாகவில்லை.

இந்த பகுதியில் இரண்டு மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. காவிரி ஆற்றிலிருந்து குழாய் மூலம் வரவழைக்கப்படும் தண்ணீர், இந்த பகுதியை கடந்துதான் செல்கிறது. இருப்பினும் தண்ணீர் வராததற்கு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் தலைவர் மற்றும் அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஊராட்சி தலைவர் நிர்மலா கூறுகையில்,""பணியாளர்களை அனுப்பி தொட்டியில் ஏற்பட்டுள்ள பழுது சரிபார்க்கப்படும்,"என்றார்.

## வறட்சி நிவாரணத்தில் முறைகேடுநடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பு

வெள்ளகோவில்: வெள்ளகோவிலில், இந்திய மக்கள் இயக்க ஆலோசனைக்கூட்டம் டாக்டர் இளங்கோ தலைமையில் நடந்தது. இதில் கள் இயக்க கள அமைப்பாளர் நல்லசாமி, கதிரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.எத்தனால் தயாரிப்பதும், சர்க்கரை இறக்குமதி தீர்வையை உயர்த்துவதுமே கரும்பு விவசாயத்தை காக்கும். சர்க்கரை மீதான சுங்க வரியை, மத்திய அரசு, 10 சதவீதத்தில் இருந்து, 15 சதவீதமாக உயர்த்தி உள்ளது. இந்த சுங்க வரியை, 50 சதவீதமாக உயர்த்தினால், சர்க்கரை இறக்குமதியை தடுத்து நிறுத்த முடியும்.வரும் லோக்சபா தேர்தலில், கள்ளுக்கான தடையை நீக்கும்

கட்சிக்கே விவசாயிகளின் ஓட்டு. வறட்சி நிவாரண நிதியை சுருட்டும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.குடிநீர் பஞ்சத்தை தமிழக அரசு எவ்வாறு தீர்க்க வேண்டுமென முடிவு செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி நதிநீர் நிர்வாகத்தை, காவிரி மேலாண்மை வாரியம் ஏற்று நடத்த வேண்டும். வறட்சி நீங்கிய பிறகு, கள் இறக்கும் போராட்டம் தீவிரப்படுத்தப்படும், எனக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.சூளூர் சுரேஷ், சிப்பி முத்துரத்தினம், உடுமலை ரவி, மாநில அமைப்பாளர்கள் தமிழ்நாடு கள் இயக்கம் கோபிநாத், தங்கராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

## உயரத்தில் பறக்கும் காய்கறி விலை குறையுமா? :"ஆடி' ஆறுதல் தரும் என எதிர்பார்ப்பு

திருச்சி: ஆடி மாதம் பிறக்கும் நிலையிலும், காய்கறி விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை. பெரும்பாலான காய்கறிகள், சராசரியாக, 25 ரூபாயை எட்டியே காணப்படுவதால், எதிர்காலத்தில் காய்கறி விலை குறையுமா? என்ற சந்தேகம் நடுத்தர மக்களுக்கு எழுந்துள்ளது.தமிழ் மாதங்களான வைகாசி, ஆனி மாதங்களில் திருமணம், காதணி, கிரஹப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகள் அதிகளவு நடக்கும். இந்த மாதங்களில் மொத்தமாக காய்கறிகள் கொள்முதல் செய்யப்படுவதால், வழக்கமாக காய்கறி விலை உயர்ந்து காணப்படும். நடப்பாண்டு கடும் வறட்சி காரணமாக காய்கறி வரத்து குறைந்தே காணப்படுகிறது.கடந்த வைகாசி மாதத்தில், ஒன்பது, ஆனி மாதத்தில், ஏழு என மொத்தம், இரண்டு மாதங்களில், 16 சுப முகூர்த்தத் தேதிகள் இருந்தன. அதிகளவு சுப முகூர்த்தத்தேதிகள் இருந்ததால், சுப நிகழ்ச்சிகளும் அதிகளவு நடந்தன. இதனால் காய்கறிகளின் விலை கடந்த, இரண்டு மாதங்களாக உயர்ந்தே காணப்பட்டன.சுபமுகூர்த்தத் தேதிகளின் எண்ணிக்கை உயர்வு, வறட்சி காரணமாக காய்கறி வரத்து குறைவு போன்ற காரணத்தால், நடப்பாண்டு காய்கறி விலை, வழக்கத்தை காட்டிலும் அதிகரித்தே காணப்படுகிறது. பெரும்பாலான காய்கறிகள், சராசரி விலையான, 25 ரூபாயை எட்டியே காணப்படுகிறது.இதனால் நடுத்தர குடும்பத்தினர் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளனர். மேலும், சுபமுகூர்த்த தேதி முடிவடைந்த நிலையிலும், காய்கறி விலையில் பெரிய மாற்றத்தை காண

முடியவில்லை. எதிர்காலத்திலும் இதே நிலை நீடிக்குமோ? என்று பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.இதுகுறித்து திருச்சி காந்தி மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் கூறுகையில், ""ஆடி மாதம் இன்று பிறக்கிறது. பெரிய விசேஷங்கள் இல்லாததால் காய்கறி விலை குறைய வாய்ப்புள்ளது. மேலும், சமீபத்தில் பெய்த கோடை மழை மற்றும் தமிழகம் முழுவதும் பரவலாக நிலவும் சீதோஷண நிலை காரணமாக, காய்கறி வரத்து அதிகரித்துள்ளது. தவிர, ஆந்திரா மாநிலத்திலிருந்தும் காய்கறி அதிகம் வருகிறது. இதனால் காய்கறி விலை குறைய வாய்ப்புள்ளது,'' என்றனர்.நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி காய்கறி விலை ஒரு கிலோவில் வருமாறு:கத்திரிக்காய் 25 ரூபாய், வெண்டைக்காய், 30, பாகற்காய், 30, முள்ளங்கி, 22, முருங்கைக்காய், 60, அவரைக்காய், 36, தக்காளி, 35, பச்சை மிளகாய், 25, உருளைக்கிழங்கு, 24, கேரட், 36, பீட்ரூட், 26, பீன்ஸ், 34, சின்ன வெங்காயம், 40, பெரியவெங்காயம், 30, பீர்க்கங்காய், 28, இஞ்சி, 185, சேனைக்கிழங்கு, 24, கருணைக்கிழங்கு, 70, சேப்பங்கிழங்கு, 36, முட்டைக்கோஸ், 12, கொத்தவரங்காய், 24, புடலங்காய், 20, தட்டைக்காய், 28, சவ்சவ், 30, மாங்காய், 35, பரங்கிக்காய், பூசனிக்காய், சுரைக்காய், தலா, 14, கறிவேப்பிலை, 30, கொத்தமல்லி (கட்டு), புதினா, 15 ரூபாய்க்கு விற்கப்படுகிதறது.காய்கறிக்கு ஆடித்தள்ளுபடிகாந்தி மார்க்கெட்டில் காய்கறி வாங்க வந்த பெண்கள் பெரும்பாலும், விலையை கேட்டு, "இன்னுமா விலை குறையல' என்று சலித்துக்கொண்டனர். மாலதி என்ற பெண் கூறுகையில், ""இன்றைக்கு காய்கறி விற்கும் விலைக்கு எதையும் சமாளிக்க முடியவில்லை. ஜவுளிக்கடைகள் ஆடித்தள்ளுபடி விற்பனையை அறிவித்துள்ளன. இதற்கு பதில் காய்கறிகளை ஆடித்தள்ளுபடி விலையில் வழங்கினால், நல்ல "சேல்ஸ்' ஆகும்,'' என்று குடும்பத்தலைவிக்குரிய கவலையுடன் கூறினார்.

### விவசாயிகள் குறைதீர்க்க 19ல் கூட்டம்

கரூர்: "மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் குளித்தலையில் வரும், 19ம் நடக்கிறது' என, கரூர் கலெக்டர் ஜெயந்தி கூறினார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கரூர் மாவட்டத்தில் ஜூலை மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் ஜுலை, 19ம் தேதி குளித்தலை ஆர்.டி.ஓ., அலுவலகத்தில்

நடக்கிறது. இதில் கரூர் மாவட்ட விவசாயிகள் பங்கேற்று, விவசாயம் தொடர்பான பிரச்னைகளை கூறலாம். விவசாயம் தொடர்பான மனுக்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்: 19ல் நடப்பு

அரியலூர்: "மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 19ம் தேதி நடக்கிறது' என, அரியலூர் கலெக்டர் ரவிக்குமார் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், வரும், 19ம் தேதி காலை, 11 மணிக்கு, அரியலூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடக்கிறது.இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்ட முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். அன்றைய தினம் விவசாயிகள் பலரும் திரளாக பங்கேற்று, தங்களது குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.07.2013**

## கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 8 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன் பெறும்

ஓசூர், : ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் 22 கிராம விவசாயிகளின் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி கெலவரப்பள்ளி அணையிலிருந்து வலது புற, இடது புற மற்றும் பிரிவு கால்வாய்களில் முதல் போக பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்து, தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழக முதல்வர் உத்தரவுப்படி, கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற கால்வாய் மற்றும் கிளைக்கால்வாய் மூலம் 5,918 ஏக்கரும், வலதுபுற கால்வாய் மூலம் 2,082 ஏக்கரும் என மொத்தம் 8 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன் அடைகின்றன.

இதன் மூலம் ஓசூர் தாலுகாவில் உள்ள சின்னகுள்ளு, பெத்தகுள்ளு, சாமனப்பள்ளி, சென்னத்தூர், அட்டகுறுக்கி, நல்லகானகொத்தப்பள்ளி, தட்டகானப்பள்ளி, பூதிநத்தம், பெத்த கதிரேப்பள்ளி, மாரசந்திரம், கொத்தூர், மோரனப்பள்ளி, தொரப்பள்ளி, திருச்சிப்பள்ளி, பெரிய முத்தாளி, சின்ன முத்தாளி, அட்டூர், காமன்தொட்டி, தின்னூர் சுபகிரி, கோனேரிப்பள்ளி, மருதாண்டப்பள்ளி உள்ளிட்ட 22 கிராமங்கள் பயன் பெறுகின்றன.

அணையின் நீர் இருப்பு மற்றும் எதிர்வரும் பருவ மழையை கருத்தில் கொண்டு 150

நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். முதல் 10 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படும். பின்னர் அடுத்த 5 நாட்கள் நிறுத்தி அதன் பின்னர் நீர் வழங்கப்படும். தற்போதைய நிலவரப்படி கெலவரப்பள்ளி அணை நீர்மட்டம் 38.05 அடியாக உள்ளது. இடதுபுற பிரதான கால்வாயில் 62 கன அடி, வலதுபுற பிரதான கால்வாயில் 26 கன அடி என மொத்தம் 88 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

நிகழ்ச்சியில் ஓசூர் உதவி கலெக்டர் பிரவீன் பி.நாயர், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அசோக்குமார், ஓசூர் நகராட்சி தலைவர் பாலகிருஷ்ண ரெட்டி, ஓசூர் ஒன்றிய குழு தலைவர் புஷ்பா சர்வேஷ், ஊராட்சி தலைவர்கள் சந்திரசேகர் (காமன்தொட்டி), பாலம்மா ராமச்சந்திரப்பா (கெலவரப்பள்ளி), வட்டார வளர்ச்சி அலுவலர் தமிழரசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கறவை மாடுகளுக்கு புதிய காப்பீடு திட்டம்**

கால்நடை பராமரிப்பு துறைக்கு நடப்பு நிதியாண்டில் திட்ட இனத்தில் ரூ.21.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 30 ஆயிரம் கோழி குஞ்சுகள் 50 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும். நடப்பாண்டில் 80 ஆயிரம் பசுக்களுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யப்படும். வீடுகளில் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 5 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட உள்ளது. கால்நடை வளர்ப்போரின் தேவையை கருத்தில் கொண்டு ஆர்கேவிஒய் என்ற திட்டத்தின் கீழ் பசும்புல் வளர்ப்பு திட்டம் அமல்படுத்தப்படும்.

மத்திய அரசின் உதவியுடன் கறவை மாடுகளுக்கு புதிய காப்பீட்டு திட்டம் ஒன்று அமல்படுத்தப்படும். ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் வெளியிலிருந்து நிதி பெறுவதற்கு ஏதுவாகவும், ராஜீவ்காந்தி கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் கல்லூரி, ராஜீவ்காந்தி கால்நடை கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த கல்வியாண்டில் ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ள ரூ.2 கோடி நிதியை

மத்திய அரசு அளித்துள்ளது. இந்தியாவிலேயே இந்திய கால்நடை குழுவின் பாடத்திட்டத்தை பின்பற்றும் முதல் கல்லூரி இது. இந்நிறுவனம் ஒரு ஆராய்ச்சி நிறுவனமாக அங்கீகாரம் பெற இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்திடம் கருத்துரு அளிக்கப்பட்டுள்ளது.

**டேலி, பால்பண்ணை தொழிலில் இலவச பயிற்சி இந்தியன் வங்கி வழங்குகிறது**

சேலம், : இந்தியன் வங்கியின் சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் டேலி மற்றும் பால் பண்ணைத் தொழிலில் இலவசமாக பயிற்சி அளிக்கிறது.
நாமக்கல் மாவட்டத்தில் உள்ள இந்தியன் வங்கியின் சுய வேலை வாய்ப்பு நிறுவனம், டேலி மற்றும் பால்பண்ணை தொழிலில் இலவச பயிற்சி வழங்க உள்ளது. இம்மாதம் மூன்றாவது வாரத்தில் இப்பயிற்சி துவங்குகிறது. டேலி பயிற்சி 30 நாட்களுக்கும், பால் பண்ணை தொழில் பயிற்சி 6 முழு வேலை நாட்களாகவும் வழங்கப்படும்.
டேலி பயிற்சியில் கலந்து கொள்ள குறைந்த பட்ச கணினி அறிவு இருந்தால் போதும். வயது வரம்பு 18 வயது முதல் 45 வயதுக்கு கீழ் இருக்க வேண்டும். வேலையில்லாத இளைஞர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். பயிற்சிக்கான செலவு, பயிற்சி பொருட்கள், உணவும் இலவசமாக வழங்கப்படும். ஆர்வம் மற்றும் தகுதியுள்ள தொழில்முனைவோர் 20.7.2013க்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.
பால் பண்ணை தொழில் பயிற்சியில் கலந்து கொள்ள குறைந்த பட்ச பண்ணை அறிவு இருக்க வேண்டும். பயிற்சியில் சேர வயது வரம்பு 18 வயது முதல் 45 வயதுக்குள் இருக்க வேண்டும். வேலையில்லாத இளைஞர்கள் இதில் கலந்து கொண்டு பயிற்சி பெறலாம். விருப்பம் உள்ள இளைஞர்கள் வரும் 18ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
 ‘இந்தியன் வங்கியின் சுய வேலை வாய்ப்பு நிறுவனம், 3/151, ரவின் பிளாசா, திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்,’ என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம். மேலும் விவரங்களுக்கு 04286 221004, 99408 66612 ஆகிய

எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை பயிற்சி நிலைய இயக்குனர் ராஜூ கூறியுள்ளார்.

**இன்னும் இரண்டு நாட்கள் மழை பெய்யும்**

சென்னை : தென்மேற்கு பருவமழை தற்போது தீவிரம் அடைந்துள்ள நிலையில் தமிழகத்தில் வெப்ப சலனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து நேற்று முன்தினம் இரவு தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக காஞ்சி 50 மிமீ, சென்னை விமான நிலையம், ஸ்ரீபெரும்புதூர், கேளம்பாக்கம், மதுராந்தகம், தாமரைப்பாக்கம், சோழவரம், சென்னை டிஜிபி அலுவலகம் 30 மிமீ, செஞ்சி, கல்பாக்கம், மாமல்லபுரம், செங்கல்பட்டு, எண்ணூர், செம்பரம்பாக்கம் 20 மிமீ, தாம்பரம், உத்ரமேரூர், திருவள்ளூர், சின்னகல்லார், சோளிங்கர், நெய்வேலி 10 மிமீ மழை பெய்துள்ளது.

தமிழகத்தில் நிலவும் வெயில் காரணமாக வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. அதனால் தமிழகம், புதுச்சேரியில் இரண்டு நாட்களுக்கு மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். பகலில் அதிகபட்சமாக 93 டிகிரி அளவுக்கு வெயில் நிலவும். மாலை, இரவு நேரங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**தாவர எண்ணெய் இறக்குமதி 21% உயர்வு**

புதுடெல்லி: தாவர எண்ணெய் வகைகள் இறக்குமதி, ஜூன் மாதத்தில் 21 சதவீதம் உயர்ந்து, மொத்தம் 9 லட்சத்து 47,591 டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதுவே கடந்த ஆண்டு ஜூனில் 7 லட்சத்து 83,315 டன்னாக இருந்தது. மொத்த இறக்குமதியில் 9 லட்சத்து 11,091 டன் சமையல் எண்ணெய் வகைகளாகும். மற்ற எண்ணெய் வகைகள் 36.500 டன் இறக்குமதியாகியுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் கடந்த ஆண்டு ஜூனில் 1 லட்சத்து 27,619 டன் இறக்குமதி ஆகியிருந்தது. இந்த ஆண்டு ஜூனில் இது 2 லட்சத்து 96,230 டன் என இரட்டிப்பாகியுள்ளது.

அதே போல், சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியும் 15 சதவீதம் உயர்ந்து 1 லட்சத்து 1,480 டன் ஆகியுள்ளது. முந்தைய ஆண்டில் இது 87,859 டன்னாக இருந்தது. தற்போது ரூபாய் மதிப்பு சரிந்துள்ளதால், எண்ணெய் இறக்குமதி குறைந்து வருகிறது

**குறுவை சாகுபடியில் நெல் செயல் விளக்க திடல் அமைக்க ரூ.3ஆயிரம் மானியம்**

தேனி: குறுவை சாகுபடியில் செயல்விளக்க திடல் அமைக்க ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளது. தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்குப்பகுதிகளான கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், பழனிசெட்டிபட்டி பகுதிகளில் நெல் விவசாயம் அதிகளவில் நடக்கிறது. குறுவை சாகுபடி தற்போது துவங்கியுள்ளது. இப்பருவத்தில் தேனி மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி 500 ஹெக்டேரில் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 500 ஹெக்டேரில் செயல்விளக்கத் திடல் அமைக்க வசதியாக தேனி மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருள்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. திருந்திய நெல் சாகுபடிக்கான செயல் விளக்கத் திடல் அமைக்க இடுபொருள் மானியமாக ரூ.ஆயிரத்து 500ம், நடவு மானியமாக ரூ.ஆயிரத்து 500மாக சேர்த்து ஒரு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியமாக வழங்கப்பட உள்ளது என வேளாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 8 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன் பெறும்**

ஓசூர், : ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் 22 கிராம விவசாயிகளின் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.
கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா

அறிவித்தார். அதன்படி கெலவரப்பள்ளி அணையிலிருந்து வலது புற, இடது புற மற்றும் பிரிவு கால்வாய்களில் முதல் போக பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்து, தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழக முதல்வர் உத்தரவுப்படி, கெலவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற கால்வாய் மற்றும் கிளைக்கால்வாய் மூலம் 5,918 ஏக்கரும், வலதுபுற கால்வாய் மூலம் 2,082 ஏக்கரும் என மொத்தம் 8 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன் அடைகின்றன.

இதன் மூலம் ஓசூர் தாலுகாவில் உள்ள சின்னகுள்ளு, பெத்தகுள்ளு, சாமனப்பள்ளி, சென்னத்தூர், அட்டகுறுக்கி, நல்லகானகொத்தப்பள்ளி, தட்டகானப்பள்ளி, பூதிநத்தம், பெத்த கதிரேப்பள்ளி, மாரசந்திரம், கொத்தூர், மோரனப்பள்ளி, தொரப்பள்ளி, திருச்சிப்பள்ளி, பெரிய முத்தாளி, சின்ன முத்தாளி, அட்டூர், காமன்தொட்டி, தின்னூர் சுபகிரி, கோனேரிப்பள்ளி, மருதாண்டப்பள்ளி உள்ளிட்ட 22 கிராமங்கள் பயன் பெறுகின்றன.

அணையின் நீர் இருப்பு மற்றும் எதிர்வரும் பருவ மழையை கருத்தில் கொண்டு 150 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். முதல் 10 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படும். பின்னர் அடுத்த 5 நாட்கள் நிறுத்தி அதன் பின்னர் நீர் வழங்கப்படும்.  தற்போதைய நிலவரப்படி கெலவரப்பள்ளி அணை நீர்மட்டம் 38.05 அடியாக உள்ளது. இடதுபுற பிரதான கால்வாயில் 62 கன அடி, வலதுபுற பிரதான கால்வாயில் 26 கன அடி என மொத்தம் 88 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

நிகழ்ச்சியில் ஓசூர் உதவி கலெக்டர் பிரவீன் பி.நாயர், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அசோக்குமார், ஓசூர் நகராட்சி தலைவர் பாலகிருஷ்ண ரெட்டி, ஓசூர் ஒன்றிய குழு தலைவர் புஷ்பா சர்வேஷ், ஊராட்சி தலைவர்கள் சந்திரசேகர்

(காமன்தொட்டி), பாலம்மா ராமச்சந்திரப்பா (கெலவரப்பள்ளி), வட்டார வளர்ச்சி அலுவலர் தமிழரசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**ஆழியார் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்காததால் ஏமாற்றம்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்காததால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர். வேட்டைகாரன்புதூர், சேத்துமடை, பொள்ளாச்சி, பழைய, புதிய ஆயக்கட்டு பாசனங்கள் ஆகியவை களுக்கு மதகுகளில் வழியே தண்ணீர் திறந்து விடப்படும். கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்தது. இதனால் ஆழியார் அணையின் நீர் மட்டம் நாளுக்கு நாள் சரிந்தது. 3 மாதமாக அந்த மதகுகளில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. கடந்த ஜூன் மாதத்தில் துவங்கிய பருவ மழையால் அழியார் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. தற்போது வினாடிக்கு 689 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது. அணையின் நீர்மட்டம் 85 அடியாக உயர்ந்துள்ளது. ஆழியார் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதை யொட்டி குக்கிராமங்களில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள, பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு ஆழியார் அணையிலிருந்து தேவையான தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து, பழைய ஆயக்கட்டு பாசன பகுதி களுக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கான நட வடிக் கையை பொதுப் பணித்துறை யினர் எடுத்த னர். பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது குறித்து அரசாணைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 15ம் தேதி(நேற்று) பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதற்காக, அரசாணைக்காக பொதுப்பணித்துறையினர் அதிகாரிகள் காத்திருக்கின்ற னர். ஆனால் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு, அணையிலிருந்து தண்ணீர் திறப்பது குறித்த அரசாணை உத்தரவு இன்னும் வரவில்லை. அதையறிந்த விவசாயிகள் அதிருப்பதி யடைந்துள்ளனர்.
இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், “ஆனைமலை, சேத்துமடை, ஒடையக்குளம், கோட்டூர், அம்பராம்பாளை யம் மற்றும் அதனை சுற்றியுள்ள

கிராமபகுதிகளில் ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை பொழியும்போது குறுவை நெல் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுகின்ற னர். கடந்த ஆண்டு மழை பொய்த்ததால் குறுவை நெல் சாகுபடி அதிகமாக இல்லை. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொழிந்ததால், குறுவைநெல் சாகுபடிக்காக, விவசாய நிலங்கள் உழவு செய்யப்பட்டு செம்¬ மப்படுத்தப்பட்டுள்ளது.

குருவைநெல் சாகு படிக்கு தேவையான தண்ணீர் ஆழியார் அணையிலிருந்து திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று 15ம் தேதி (நேற்று) தண்ணீர் திறக்கப்படும் என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். இதற்காக கடிதம் அனுப்பப்பட்டு, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற அரசாணைக்£க காத்திருந்தோம். ஆனால், பழைய ஆயக்கட்டுக்கு தண்ணீர் திறப்பது குறித்த உத்தரவு இன்னும் வராதது விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது“ என்றனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நாளை (18ம் தேதி) நடக்கிறது.இதுகுறித்து கலெக்டர் ஆசிஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளை கேட்டறியும் வகையில் மாதம்தோறும் 3வது வியாழக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப் பட்டு வருகிறது. அதன்படி, ஜூலை மாதத்துக்கான குறைதீர் கூட்டம் நாளை (18ம் தேதி) பகல் 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர்  தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் விவசாய சங்கத் தலைவர்களும், பாசன சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.